ஒவ்வொரு
வெள்ளிக்கிழமையும்
உங்கள் கரங்களில்...
வார இதழாக
மக்கள்
கருத்துக்களுடன்!

Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

صوت المسلم

Muslim Kural

මුස්ලිම් කුරල්

04 ஏப்ரல் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 02 - ஸபர் - 1424 ☆ சுவடு - 07. ☆ தருகை - 10 ரூபா

## முஸ்லிம் மக்களிடமிருந்து அன்ரன் பாலசிங்கத்திடம் ஒரு கேள்வி!



"இருபத்தைந்து ஆண்டு காலப் போரின் விளைவாக இரண்டு பெரிய சக்திகளான அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நடத்தும் பேச்சு இதுவென்பதை முஸ்லிம் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும், மூன்று தரப்பு பேச்சு நடாத்துவதற்காக இந்தப் போரை நாங்கள் 25 வருடங்களாக நடாத்தவில்லை" என டோக்கியோ பேச்சு வார்த்தை முடிந்த கையோடு ஆவேசமாக தெரிவித்துள்ளீர்கள்!

இந்நேரத்தில் உங்களிடம் கேட்க எம்மிடம் ஒரு கேள்வி உள்ளது! முஸ்லிம்களும் ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்து பெருமளவு சொத்துக்கள் அழிக்கப்பட்டு அநாதரவாக நின்ற போதும், அவை அனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக "புலிகளையும் - அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வர ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை அமைத்தது முஸ்லிம்களை வெறும் பார்வையாளராக வைத்துக் கொண்டு உங்கள் ஆதிக்கத்தினுள் அடகுவைக்கவா முஸ்லிம்கள் தங்கள் வாக்குரிமையை வழங்கினர்?

உங்களுக்கு மட்டுமா ஆவேசம் வருகிறது? எமது மக்களின் ஆவேசமும் அங்கலாய்ப்பும் இதுதான் என்பதை எப்போது புரிந்து கொள்ளப் போகிறீர்கள்?

# பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்பார்களா? அமைச்சர் பதவிகளைத் துறப்பார்களா? மக்களுக்காக நமது எம்.பிக்கள் போராடுவார்களா?

## 7ம் சுற்றும் பேச்சுவார்த்தையே இறுதிக்காலக்கெடு!



ஈராக் மீது நடாத்தப்படும் அநியாயத்தின் மீது நமது மக்களில் பெரும்பான்மையானோரின் கவனம் குவிந்திருக்கும் இவ்வேளையில், நமது மக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் வகையில் மிகத் திட்டமிட்டு அரசியல் அரங்கில் விடயங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. சொந்த மக்களின் நியாயமான அரசியல் ஜீவாதார உரிமைகள் - அடக்குமுறை ஆதிக்க சக்திகளினால் மிக மோசமாக நிராகரிக்கப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையில், நமது அரசியல் தலைமைகளோ மௌனம்! மௌனம்!! மௌனம்!!!

இந்த அறிதுயில் நிலையிலிருந்து கொண்டு இடைக்கிடையே சில அறிக்கைகளும் ஒரு சில வாக்குறுதிகளும் சுயபிரக்ஞையில்லாமல் நமது மக்களிடம் சொல்லப்பட்டு காலம் கடத்தப்பட்டு வருகிறது. நமது அரசியல் தலைமைகளினால் நேற்றொன்றும், இன்றொன்றுமாக முன்னுக்குப் பின் முரணாக வழங்கப்பட்ட அவ்வாக்குறுதிகள் அற்பாயுளில் மடிந்து விடுகின்றன. நமது மக்களுக்கு சாதகமான நம்பிக்கை தரும் எவ்விதமான அறிகுறிகளும் இவர்களது அரசியல் வழிகாட்டலில் இது வரை தென்படவில்லை. இவர்களின் சந்தர்ப்பவாத அரசியல் கையறு நிலை, நமது மக்கள் மத்தியில் மெல்ல மெல்ல திரைவிலக்கத் தொடங்கி விட்டது.

7 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் தனித்துவத் தரப்பு, அரசியல் தீர்வு ஏற்பாட்டில் சுயநிர்ணயத்துடன் கூடிய தனித்துவ அதிகார அலகு என்கின்ற உயிர் நாடியான முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடுகள், நடைபெறும் பேச்சுவார்த்தை மேசையில் இடம்பெற்று உடன்பாடு காணப்பட்டே ஆகவேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கான இறுதிக்கட்டம் நமது அரசியல் தலைமைகளுக்கு இப்போது நெருங்கி விட்டது...

இன்று நமது மக்களுக்கு எதிராக எழுந்துள்ள அரசியல் தடைகளை உடைத்தெறிந்து நமது அரசியல் உரிமைகளுக்காக நமது மக்களின் பக்க பலத்துடன் போராட வேண்டிய அரசியல் நிர்ப்பந்தத்திற்கு நமது அரசியல் தலைமைகள் இலக்காகி விட்டன; பட்டம், பதவி, சந்தர்ப்பவாத அரசியல், இலக்கற்ற பயணம் என்பவற்றைக் கைவிட்டு நமது மக்களின் முன் தம்மை முஸ்லிம் மக்களின் தலைமைகளாக நிரூபிக்க வேண்டிய இறுதிக்கட்டமிது! யார் யார் நமது மக்களின் பக்கம்? யார் யார் முஸ்லிம் மக்களின் விரோத சக்திகளுடன் என்பது நமது அரசியல் அரங்கில் விரைவில் நாம் காணப்போகும் காட்சிகளாகும்.

நமது அரசியல் தலைமைகளில் குறிப்பிட்ட சிலர் விரைவில் நமது மக்களின் அரசியல் வாழ்வு சார்ந்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க உள்ளதாக அறிகிறோம். அவர்களுடன் தீவிரமாகத் தொண்டாற்ற நமது சமூக சக்திகள், மக்கள் என்றுமே தயாராக இருக்கிறார்கள். நமது மக்களின் இதுவரையான அரசியல் ஆணைக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பு நமது அரசியல் தலைமைகள் அனைவருக்கும் உரியது என்பதை மீண்டும் மீண்டும் அழுத்தி உரைக்கிறோம்!.

## அன்பான நமது மக்களே!

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு
நியாயமான தீர்வு - சமஷ்டி ஏற்பாடென்பதில்
கருத்தொருமைப்பாடு காணப்பட்டு விட்டது.
**சமஷ்டி** தொடர்பான
கருத்தாடல்கள் புரிதல்கள்
நமது அரசியல் தீர்வையொட்டி
சமகாலத்தில் நமது மக்கள் மத்தியில்
நடைபெற வேண்டும்!
இந்தப் பணியிலும் பாதையிலும்
**'முஸ்லிம் குரல்'**
சமஷ்டி தொடர்பான அடிப்படை புரிதல்களை
நமக்குள் தொடங்கி வைப்பதற்காக
ஒரு சிறு கைநூலை
எட்டாவது இதழுடன் இணைத்து
வெளியிட உள்ளது.
ஆர்வமுள்ளோர், கற்றுக் கொள்ள விரும்புவோர்
10/- கொடுத்து நமது பத்திரிகைப் பிரதிநிதிகளிடம்
பெற்றுக் கொள்ளலாம்!
சமஷ்டி பற்றிய புரிதல்களுடன்
தெளிவும் உறுதியும் மேலோங்க
நமக்கான அரசியல் தீர்வினை நோக்கி
அடியெடுத்து வைப்போம்.

பிரதம ஆசிரியர்.

# ஈராக் மண்ணில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு கிலி!

இரண்டு வாரமாக யுத்தம் நீடித்துக் கொண்டிருக்கும் தறுவாயில் ஆக்கிரமிப்பாளர்களின் உள்ளத்தில் பீதி ஆட்கொண்டு தங்களுக்குள்ளே மனச்சோர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனெனில் அமெரிக்க, பிரிட்டிஷ் தலைவர்கள், இராணுவத் தளபதிகள் ஈராக்கில் நடப்பவற்றிற்கு புறம்பாக பொய்யான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பாக இருந்து கொண்டிருக்கின்றது. அமெரிக்க, பிரிட்டிஷ் ஆதிக்கத் தரப்பால் பரப்பப்பட்ட பொய்கள் -

1.ஈராக்கின் அதிபர், அரசியல் பெருந்தலைவர்கள் கொல்லப்பட்டதாகவும்

2.ஈராக் இராணுவத்தின் 52ம் பிரிவின் தளபதியும் அவருடன் இருந்த 8,000 படையினரும் சரணடைந்ததாகவும்

3. சதாம் ஹுசைனுக்கு எதிராக ஈராக் மக்கள் கிளர்ந்தெழுந்ததாகவும்

4. உம்மு கஸ்ர், நாஸிரிய்யா ஆகிய இரண்டு நகரங்களும் முழுமையாக தங்களது பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாகவும்

5. நஜப் நகரில் நடைபெற்ற போரில் நூற்றுக்கணக்கான ஈராக்கிய படைவீரர்கள் கொல்லப்பட்டதாகவும்

6. சிறைக்கைதிகளாக பிடிக்கப்பட்ட அமெரிக்கப் பிரித்தானிய படையினர்களை ஈராக் படைவீரகள் துன்புறுத்தியதாகவும் அவர்களைக் கொன்றதாகவும் அத்துடன் இன்னோரன்ன கொடுமைகளைஅவர்கள் செய்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பொய் வதந்திகளை வெளிப்படுத்தியதன் காரணமாக உலக மக்களுக்கு உண்மைகள் மறைக்கப்பட்டு பொய்யான வதந்திகள் மாத்திரம் தான் அவர்கள் காதுகளுக்குச் சென்றடைந்தன. எனவே மேலே கூறப்பட்ட விடயங்களின் உண்மையை அறிந்து விட்டால் ஊடகங்கள் ஊடாக பரப்பப்பட்ட செய்திகள் யாவும் இட்டுக் கதைகள் என்று அறிந்து கொள்ள முடியும்.

அமெரிக்க பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கொள்கைகளை பிரச்சாரம் செய்துகொண்டிருக்கும் சீ.என்.என், பி.பி.ஸி, பொக்ஸ் நியூஸ் ஆகிய ஊடகங்கள் உண்மைகளை மறைத்து கபடத்தனமாக அவர்களுக்கு ஏற்ற முறையில் தங்களது பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன. அது அவ்வாறிருக்க உண்மைகளை வெளிப்படுத்தும் நோக்கில் சில முஸ்லிம் ஊடகங்கள் உலகத்துக்கு உண்மைகளை வெளிக்கொணர்வதால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாத அமெரிக்கர்கள் அந்நிலையங்கள் மீது தாக்குதல்களை, மிரட்டல்களை மேற்கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக அல் ஜஸீரா தொலைக்காட்சிக்கு நடந்ததும் இது தான்.உண்மையை மூடி மறைக்க அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் பகிரங்க பிரயத்தனப்படுகின்றன.

## அமெரிக்காவின் பொய்கள் அம்பலத்தில்

வீரமிகு ஈராக்கிய விவசாயி ஒருவர் அமெரிக்காவின் அபாட்ச்சி ஹெலிகொப்டர் ஒன்றை சுட்டு வீழ்த்தினார்.

மிக மோசமான விமானக்குண்டு வீச்சினால் படு காயமடைந்திருக்கும் ஈராக்கிய இளைஞன் ஒருவர்.

ஈராக்கிய இராணுவத்தைச் சேர்ந்த அலி ஹமாதியின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலு க்கு இலக்காகி சிதைந்து கிடக்கும் ஆக்கிரமிப்பு இராணுவம். இத்தற்கொலைத் தாக்குதலில் 11 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.







இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல் [illegible] ,வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வில் வடக்கு மாகாண முஸ்லிம்கள். பாதுகாப்பு, மீள்குடியேற்றம், அரசியல் பேச்சு வார்த்தை மேசை!

**கடந்த 29ம் திகதி மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் நடைபெற்ற வடமாகாண முஸ்லிம்கள் பற்றிய கலந்துரையாடல் தொடர்பான ஒரு தொகுப்பே இது.**

### கலாநிதி ஹஸ்புல்லாஹ்

நடைபெற்று வருகின்ற பேச்சுவார்த்தையில் அமைச்சர் ஹக்கீமின் ஆலோசகராகவே நான் கலந்து கொண்டு வருகிறேன். உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தை மேசைக்கு வெளியில் டோக்கியோவில் புலிகளின் பிரதிநிதிகளை அமைச்சர் ஹக்கீமுடன் சேர்நது நானும் சந்தித்துப்பேசினேன். முஸ்லிம்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, முஸ்லிம்களுக்கான அதிகார அலகு, சுயநிர்ணய உரிமை பற்றி பிரபாகரனுடன் கலந்தாலோசித்த பின் திருப்தியான முடிவு எடுக்கப்படும் என அவர்கள் தெரிவித்தனர். ஆனால் B.B.C பேட்டியில் அன்டன் பாலசிங்கம் அதனை மறுத்ததாக நான் கேள்விப்பட்டேன். அப்பேட்டியை நான் கேட்கவில்லை.

இடம் பெறும் பேச்சுவார்த்தைகளில் ஹக்கீம் அனைவருக்கும் ஈடுகொடுத்து முஸ்லிம்களின் பிரச்சினையை பேசிவருகிறார். வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினையில் அவர் ஆர்வமாகவும் ஆணித்தரமாகவும் உள்ளார். ஆனால் பேச்சுவார்த்தை மேசையில் புலிகளினதும் அரச தரப்பினரினதும் (ஹக்கீம் தவிர்ந்த) கைகளே ஓங்கியிருப்பதனால் ஹக்கீம் முன்வைக்கும் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்கள் முன்னுரிமைப்படுத்தப்படாமல் கைவிடப்படுகின்றன.

கடைசியாக டோக்கியோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு நாங்கள் சென்ற போது ஜப்பான் விமானநிலையத்திலிருந்து ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டது பின்னர் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துச் செல்லப்பட்டது அனைத்துமே ஒரு இருள் சூழ்ந்த நிலைக்குள் இடம்பெற்றதாகவே அமைந்திருந்தது. பேச்சுவார்த்தை முடிவடைந்து நாடு திரும்புவதற்காக விமான நிலையம் வந்த போதுதான் என்னால் சூரிய ஒளியைக்கூட பார்க்க முடிந்தது. இவ்வாறான அவசரமானதும் பரபரப்பானதுமான சூழ்நிலையில் தான் நான் ஹக்கீமின் ஆலோசகராக கலந்து கொண்டு வருகிறேன்.

### அமைச்சர் நூர்தீன் மசூர்

முஸ்லிம் காங்கிரசை இல்லாதொழித்து முஸ்லிம்களின் அரசியல் குரலை ஓயச்செய்ய வேண்டும் என்ற சதித்திட்டத்தில் விடுதலைப்புலிகள் மிக மும்முரமாகவே செயற்பட்டார்கள். இச்சந்தர்ப்பத்தில்தான் தலைவர் அஷ்ரஃப் அவர்களின் மரணமானது அவர்களுக்கு பெரும் ஆறுதலை அளித்தது. இனிமேல் அவர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் தடையாக இருக்கப்போவதில்லை என்று புலிகள் கருதி சந்தோசப்பட்ட வேளையில் தான் இறுதியாக இடம்பெற்ற பொதுத்தேர்தலில் 12 ஆசனங்களை பெற்று முஸ்லிம் காங்கிரஸ் பெரும் வெற்றியீட்டியது. இது மீண்டும் புலிகளுக்கு பெரும் தடையை ஏற்படுத்தியது. எப்படியாவது முஸ்லிம் காங்கிரஸையும் அதன் செயற்பாடுகளையும் செயலிழக்கச்செய்ய வேண்டும் என்ற நோக்கில் விடுதலைப்புலிகள் செய்த சதி முயற்சிதான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை வன்னிக்கழைத்து பேசியதாகும். மர்ஹூம் அஷ்ரஃப்பின் மரணத்தில் கூட விடுதலைப்புலிகளே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற சந்தேகம் கூட தொடர்ந்து கொண்டிருக்கிறது. உண்மையிலேயே புலிகளுக்கு முஸ்லிம்களுக்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்பதில் உடன்பாடே கிடையாது. இவற்றையெல்லாம் நன்கு தெரிந்து வைத்துக்கொண்டும் ஏன்தான் இந்த அமைச்சர் றவூப் ஹக்கீமும் டொக்டர் ஹஸ்புல்லாவும் பேச்சுவார்த்தை இடம்பெறும் நாடுகளுக்கு போய்க்கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம் சமூகத்திற்கு இவர்களால் பெறப்படப் போவது ஒன்றுமே இல்லை.

### றிஷாட் பதியுத்தீன் எம்.பி

ஆரம்ப நாட்களில் "சிரான்" கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு எனக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது. அப்போது முஸ்லிம்கள் விடயத்தில் புறக்கணிப்புக்கள், இழுத்தடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போது நான் அதற்கு எதிராக குரல் கொடுத்து வந்தேன். இது விடுதலைப்புலிகளுக்கு பிடிக்காத ஒரு விடயமாக இருந்திருக்கலாம். சில நாட்களுக்கு பின் பிரதமர் ரணில் விக்ரம சிங்க என்னை அழைத்து எனது காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டார். "தயவு செய்து சிரான் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டாம். அதற்கு பதிலாக உங்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து தருகிறேன். தேவைப்பட்டால் ஒரு அமைச்சருக்குரிய சகல வசதிகளையும் கூட நான் உங்களுக்கு செய்து தருகிறேன்" என்று. நான் பதவி சொகுசுகளுக்கு மயங்கிப்போய் விடவில்லை. சிரான் கூட்டங்களில் கலந்து கொண்டால்தான் எனது மக்களின் பிரச்சினைகள் குறித்து தைரியமாகப் பேச முடியும் என்று பிரதமரிடம் நான் குறிப்பிட்டேன். நான் சிரான் கூட்டங்களில் பங்குபற்றுவதிலிருந்தும் என்னை விலகச்செய்துவிட்டார் பிரதமர். இன்று இடம்பெறுகின்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் விடயம் குறித்து பேசப்படுவது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டாலும் அவை வெறும் கண் துடைப்பேயாகும். இப்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் அரசியல் விளையாட்டில், அரசாங்கத்தாலும் விடுதலைப்புலிகளாலும் முஸ்லிம்கள் மிகவும் மோசமாக ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

### கலந்து கொண்ட முக்கிய அரசாங்க அதிகாரி ஒருவர்.......

"சிரான்" கூட்டங்களில் கலந்து கொள்கிறவன் என்ற அடிப்படையில் நான் இதைச் சொல்கிறேன். நாம் பங்குபற்றும் கூட்டங்களில் எந்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றை ஆதரிப்பதிலும் நிராகரிப்பதிலும் புலிகளின் கையே மேலோங்கி நிற்கின்றது. அரசாங்கம் சார்பாக ஒரு விடயம் பேசப்படுகின்ற போது கூட அது விடுதலைப் புலிகளுக்கு திருப்தி அளிக்கவில்லையென்றால் உடனே அவர்கள் அதற்கெதிராக பலமாக குரல் எழுப்புகிறார்கள். அரசாங்கம் கூட விடுதலைப்புலிகளை நொந்துகொள்ளாமல் அவர்களை மேவிப்போவதிலேயே கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. இந்நிலையில் முஸ்லிம்களின் நலன் பேணும் வகையில் விடயம் ஒன்று பேசப்படுகின்ற போது அது விடுதலைப்புலிகளுக்கு திருப்தியளிக்கவில்லையென்றால் அரசாங்க தரப்பும் புலிகளின் பக்கம் சார்ந்து நின்று முஸ்லிம் மக்களின் தேவைகளை நிராகரிக்கின்ற தன்மையே இன்றைய சிரான் கூட்டங்களிலும் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. தயவு செய்து எனது பெயரை வெளிப்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

### கலந்து கொண்டவர்கள் தெரிவித்த கருத்துக்களிலிருந்து...

பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ளும் முத்தரப்புக்கு இடமில்லை என்று புலிகளின் பிரதிநிதி அன்டன் பாலசிங்கம் பி.பி.சியில் அளித்த பேட்டிக்கு எதிராக வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் ஒன்றிணைந்து பாரிய எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இது ஒலுவிலில் இடம் பெற்ற முஸ்லிம் தேசப்பிரகடனம் போன்று ஒன்றுபட்ட வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் ஏகோபித்த குரலாக அமைய வேண்டும்.

தொடர்ந்தும் அரசாங்கம் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களை பேச்சுவார்த்தைகளின் போது அலட்சியம் செய்துகொண்டே வந்தால் அரசாங்கத்துக்கு ஆதரவளித்துக்கொண்டிருக்கின்ற பன்னிரெண்டு முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது ஆதரவை விலக்கிக் கொள்ளுமாறு கோரி, மக்கள் பேரணியை ஏற்பாடு செய்ய தூண்டுதல் வேண்டும்.

- எம்.எல்.எம். அன்ஸார்.




## வடக்கு கிழக்கு மாகாண சபையின் செயலாளர் நியமனம் சம்பந்தமாக

தற்பொழுது வடக்கு, கிழக்கு மாகாண சபையில் 9 செயலாளர் பதவிகளில் 8 பேர் தமிழர்களும், ஒருவர் சிங்களவராகவும் இருந்து வருகின்றனர். ஏற்கனவே கல்வி கலாசார விளையாட்டுதுறை அமைச்சின் செயலாளராக இருந்த ஒரு முஸ்லிம் ஓய்வு பெற்று சென்றதும் இதற்கும் ஒரு தமிழர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனையிட்டு வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் கவலையை தெரிவித்துக் கொள்கின்றனர்.

மாகாண சபையில் உள்ள செயலாளர் பதவிகளில் குறைந்த பட்சம் 3 செயலாளர் பதவிகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்படல் வேண்டும். இது விடயமாக பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே, மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பொழுது 5 அமைச்சுகளில் 3 தமிழர்கள், ஒரு முஸ்லிம், ஒரு சிங்களவர் என வகுக்கப்பட்டது. முஸ்லிம்களுக்கான விகிதாசாரம் கிடைக்கவில்லை. ஆகையினால் மாகாண சபையில் முஸ்லிம் செயலாளர் ஒருவராவது உடன் நியமனம் செய்யப்பட்டல் வேண்டும். 1. கல்வி, 2. திட்டமிடல்,3. காணி விவசாயம், 4. புனர்வாழ்வு, 5. நிதி, 6. பொது நிருவாகம், 7. பிரதம செயலாளர், 8. ஆளுனர் செயலாளர் (இவர்கள் எட்டுப்பேரும் தமிழர்களாவர்) 9. சுகாதாரம், (சிங்களவராவார்) ஆகவே, முஸ்லிம் ஒருவரும் இல்லை. நிருவாகத்தை பரவலாக்கும் திட்டத்தின் கீழ் முஸ்லிம்களுக்கும் உரிமை வழங்கப்படல் வேண்டும். ஆகையினால் முஸ்லிம்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட செயலாளர் பதவிக்கு ஒரு முஸ்லிம் நியமனம் செய்யப்படல் வேண்டும் என வேண்டுகின்றோம்.

*எம்.ஐ.உதுமாலெப்பை,*
*அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி*
*அம்பாறை மாவட்ட சம்மேளனம்.*

## தர்காநகர் தேசியக் கல்வியியல் கல்லூரி பற்றிய சித்தி சிபாவின் அறியாமை!

இடநெருக்கடி இருக்கும் போது அதிகமான மாணவிகளை சேர்ப்பதற்கு, எப்போதோ கட்டி முடியும் கட்டிடத்தை நம்பி எடுப்பது என்பது எவ்வளவு பிழை! முஸ்லிம்களுக்கான இத்தேசியக் கல்வியியல் கல்லூரியில் முஸ்லிம்களின் விகிதாசாரம் பேணப்படுவதுடன் எதிர்காலத்தில் முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரிய தேவையை வடகிழக்குத் தமிழ் மாணவிகளைச் சேர்ப்பதால் பூர்த்தி செய்ய முடியுமா? அவர்களுக்குத்தான் எத்தனை கல்வியியல் கல்லூரிகளுண்டு! மத்திய மாகாண கல்வியியல் கல்லூரியில் முஸ்லிம் மாணவர்கள் சேர்க்கப்பட்ட போது நடைபெற்ற வேலை நிறுத்தம் ஞாபகமுள்ளதா? நாங்களும் அப்படிச் செய்ய வேண்டுமா?

பீடாதிபதி கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு வெறுமையாக இருந்த பீடாதிபதி தங்கும் வீட்டைக் கையளித்தது இப்போதுதான். அதற்குமுன் அவர் அங்கிருந்தாரா? அவர் பின்னேரம் போவதும், காலையில் கூட்டிவர அழுத்கம செல்வதும் அமைச்சின் வாகனமே வாயிருந் தால் பேசும்.

உபபீடாதிபதியின் கல்வித்தகைமையென்ன? அவருக்களித்த கிறேட் எதனை நோக்கித் தெரியுமா? இவருக்கு சேவை நீடிப்புக் கொடுக்க இவரிடமுள்ள தேவைகள் எவை? இரவிலேயே தங்காத பீடாதிபதி தனது பொறுப்பை யாரிடமளித்துச் செல்கிறார். பீடாதிபதி கொழும்பு சென்றபின், விடுதிச் சுப்ரிண்டனும் வெளியேறிவிடுவதை அறிந்தவர் யார்? இரண்டு பேர் வந்தது இப்போது தான்.

இன்னும் அதிக குழறுபடிகள் நிதி விஷயத்திலும் நடக்கின்றதாம். அவை நமக்கு இவ்விடத்தில் தேவையில்லை. பெப்ரவரி நான்காந் திகதி சுதந்திர தினத்தன்று களுத்துறை முஸ்லிம் வாலிப முன்னணியின் கூட்டத்தில் இக்கல்லூரியை பற்றி அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் முன்னிலையில் அதிகநேரம் பேசப்பட்ட சங்கதியும், உடனே அமைச்சுக்கு நேரம் எடுத்துத் தருகிறேன். இவற்றைக் கூறும்படி ஆட்கள் நியமித்ததும் யாருக்காவது தெரியுமா?

நான் ஒரு உண்மைவாதியே. உண்மையைத் தேடுவதே நிருபா கடமை. செய்யும் பிழைகளுக்கு நியாயம் கற்பித்தல் கடினமானதல்ல. இந்தக் கல்லூரி ஒரு சமூகத்தின் சொத்து அதைக் காப்பாற்றுதல் யாவரதும் கடமையே! இக்கல்லூரி இருக்கும் மாவத்தையில் உள்ள சித்தி சிபா உங்கள் வீட்டின் இலக்கத்தை தந்தால் இதே கல்லூரிக்கு அழைத்துச் சென்று இன்னும் பல புதுமைகளைக் காட்ட முடியும்.

-பேருவளை செய்தியாளர்

## அய்யம் பேட்டை குர்ஆன் மகாநாடு அனாதையாகுமா?



1992ல் அய்யம் பேட்டை குர்ஆன் மகாநாட்டில் பிடிக்கப்பட்ட படம் இது.

மரணம் இயற்கையானதே. ஆனால் சிலரது மரணம் பேரிழப்பை ஏற்படுத்திவிடுவது என்பது மறுப்பதற்கில்லை. அறிவாளிகளின் மரணம் அறிவுலகின் மரணம் என்பார் சான்றோர். அதேபோல் செல்வம் - தானதர்மம், இரக்கம், என்பவற்றின் மரணம் அப்துல் ரஹீம் ஹாஜியாரின் மரணத்துடன் முடிவடையும் அபாயம் அய்யம் பேட்டையில் ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவ்வூரில் முஸ்லிம்கள் பலராலும் பேசப்படுகின்றது. அடுத்த வருடம் அய்யம் பேட்டையில் திருக்குர்ஆன் மகாநாட்டை ஒரு வெள்ளி விழாவாக சிறப்பாக நடாத்தத் திட்டமிட்டிருந்தார் அப்துல் ரஹீம் ஹாஜியார். திருக்குர்ஆன் மகாநாட்டை கடந்த சில வருடங்களாக தொடர்ந்து சிறப்பாக நடாத்தினார். 100 ஏழைத்திருமணங்களை நடாத் திய பெரிய தர்மவான் அவர். அது மட்டுமல்ல அப்துல் ரஹீம் ஆண்டுதோறும் அய்யம் பேட்டையில் குர்ஆனுக்காக விழா நடத்தி தமிழகத்தைச் சார்ந்த உலமாக்கள், பத்திரிகையாசிரியர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், சமுதாயத்திற்காக உழைப்பவர்களை வரவழைத்து அவர்களை கௌரவித்து அன்பளிப்புக்களையும் வழங்கியவர் அவர். அவரால் கௌரவிக்கப்படாத கண்ணியம் பெறாத சமுதாய முக்கியஸ்தர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இருப்பர். நமது நாட்டில் இருந்தும் பலர் கௌரவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"முஹிப்புல் உலமா" என்ற பட்டத்தை சமுதாய சார்பில் பெற்றவர் என்பதும் அவரின் மறைவு முஸ்லிம் சமுதாயத்திற்கு ஒரு பேரிழப்பாகும் என்பதும் மறுப்பதற்கில்லை. இறுதி மூச்சு வரை சமூகப்பணியாற்றும் அவரின் ஆர்வமும் சுறுசுறுப்பும் அவருக்கு குறையவில்லை. அப்துல் ரஹீமின் பிள்ளைகள், நண்பர்கள் அனைவரும் சேர்ந்து அப்துல் ரஹீம் ஹாஜியாரின் நற்பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலம் அய்யம் பேட்டை குர்ஆன் மகாநாட்டை அநாதையாக்காமல் காப்பாற்றலாம்.

- ஹாசிம் உமர்.

## ஒரு காலமான ஊமைச் செய்தி

எண்ணிக்கையற்ற துயரங்களோடும்
புறந்தள்ளப்பட்ட செய்திகளோடும்
இழுபட்டு வருகிறது
உனது காலம்

அலுப்புத் தரும் வாழ்வின்
மிகுதியில்
திடீர் இயற்கை
கனத்த வலியுடன்
அவாவிப் பிழிகிறது உயிரை

இருந்தவனுக்காக தோண்டப்படும்
குழியில்
பிறிதொரு வாழ்க்கையோடு
போய் முடிகிறது சடலம்

சேர்க்கப்பட வேண்டிய
விசாரிப்புகளுக்கிடையில்
முற்றத்தில் மூத்த பிள்ளைகள்
ஓடி விளையாட
இடுப்புக் குழந்தையோடு
தில்லறை பரவுகிறது
தலை வாசலில்.

-உவைஸ்கனி

# ஆக்கிரமிக்கப்பட்ட முஸ்லிம்களின் விவசாய நிலங்கள்
## மட்டக்களப்பு மாவட்டத்தில் மீளக் கையளிக்கப்படும் சூழல்!

(மட்டக்களப்பு செய்தியாளர்)

90 ஆண்டுக்குப்பின் மிகப் பெருவாரியாக மட்டக்களப்பு முஸ்லிம்களுக்கு சொந்தமான விவசாய நிலங்கள், மேய்ச்சல் காணிகள், கால்நடைகள், குடியிருப்புப் பிரதேசங்கள் புலிகளின் ஆக்கிரமிப்பினால் முஸ்லிம்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டன. இன்றைய அரசியல் சூழலின் நிர்ப்பந்தம் காரணமாக, டோக்கியோ பேச்சுவார்த்தையில் இணங்கிக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகள் மீளக்கையளிக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களின் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து விலக்கி கையளிப்பதற்கான சந்திப்புகள், ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதையிட்டு முஸ்லிம் விவசாயிகளுக்கு பெருத்த மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தங்களுக்கு உரித்தான நிலங்களை மீண்டும் சென்று பார்த்துவரவும் , அதில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்குமான உரிமையை இச்சந்தர்ப்பத்தில் நிலைநிறுத்தி உறுதிப்படுத்தியிருப்பதுவே அவர்களின் மகிழ்ச்சிக்கு பிரதான காரணமாக உள்ளது. ஆனால், இவ்விடயத்தில் மிக முக்கியமான ஒரு கேள்வி மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அதாவது பயிர்ச்செய்கைக்கான



உத்தரவாதமானது: நீண்டகால அடிப்படையில் இப்பிரதேசங்களில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் முஸ்லிம்களுக்கான அரசியல் உத்தரவாதமாக அமையுமா என்பதே பிரதான சந்தேகமாக உள்ளது. தேசிய இனப்பிரச்சினையை வெறுமனே விவசாய நிலங்களின் காணிப் பிரச்சினையாக குறுக்கிப் பார்ப்பது அல்லது அதுவாக மட்டுமே காட்ட சம்மந்தப்பட்ட அரசியல் தலைமைகள் வெளிக்கிடுவதே இச்சந்தேகத்திற்கான பிரதான காரணமாக உள்ளது. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களுக்கான அரசியல் உத்தரவாதம் நிராகரிக்கப்பட்டு: விவசாயம் செய்வதற்கான உத்தரவாதம் வழங்குவது குறித்து நமது அரசியல் தலைமைகள் மௌனம் சாதிக்கிறன்றன. வெறும் நிலப்பிரச்சினையாக தமிழ் முஸ்லிம் அரசியல் பிரச்சினையை அடையாளப்படுத்த இன்று முயற்சிக்கப்படுகிறது. இச்செயலானது இப்பிரதேச விவசாயிகளின் உயிருக்கும் பொருளாதார முதலீட்டுக்கும் எவ்விதமான உத்தரவாதத்தினையும் வழங்கி விடப் போவதில்லை. விடுதலைப் புலிகள் எவ்வித நிபந்தனையுமில்லாமல் முஸ்லிம்களுக்கு உரித்தான நிலங்களை கையளிக்க முன் வந்துள்ளதாக பசீர் சேகுதாவூத் எம்.பி. கூறி இருக்கிறார். ஆனால் நிலைமை அப்படியில்லை. பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில்தான் நிலங்கள் கையளிக்கப்படும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



1. புலிகளின் இராணுவத்தளங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு உரித்தான காணிகள் கையளிக்கப்பட மாட்டாது! முஸ்லிம்கள் இப்பிரதேசத்தினுள் வருவதற்கு எந்த விதத்திலும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்!
2. 12 வருடங்களுக்கு மேலான நிலப்பயன்படுத்துகைக்கு முஸ்லிம்கள் எதுவிதமான நஷ்டங்களும் கோர முடியாது!
3. தற்போது முஸ்லிம்களுக்கு உரித்தான விவசாய நிலங்களில் தமிழ் விவசாயிகள் அல்லது புலிகள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் அதனை உரியவர்களுடன் பேசி, அவர்களுக்கான செலவீனங்கள் வழங்கப்படல் வேண்டும்.

இம்மூன்று நிபந்தனைகளின் அடிப்படையிலும் தான் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு உரித்தான நிலங்கள் கையளிக்கப்பட பேச்சு நடைபெற்று வருகிறது. நிலக் கையளிப்புத் தொடர்பாக BBC செய்தியாளர் பசீர் சேகுதாவூத்திடம் கேட்ட போது. அவர் BBC க்கு அளித்த பதிலை நாம் இங்கு அப்படியே தருகிறோம்.

**BBC செய்தியாளா** - அங்கு இருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுக்கு வரி கட்டி வரும் நிலைமை இருப்பதால் முஸ்லிம்களும் வரி கட்ட வேண்டிய நிலை ஏற்படும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

பசீர் சேகு தாவூத் - நான் உண்மையிலே இது சம்பந்தமான ஒரு தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறேன். ஏற்கனவே அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் அப்பகுதிகள் விடுதலைப் புலிகளின் ஆட்புலம் என்ற வகையில், விடுதலைப் புலிகளோடு உறவு கொண்டு சரியான ஆட்சி முறையை மேற்கொண்டு வருகிறார்கள். முஸ்லிம்கள் அங்கு தொழில் செய்யப் போகின்றவர்கள் என்ற அடிப்படையில், அதற்கேற்ற வகையில் அப்பகுதியில் முஸ்லிம்கள் நடந்து கொள்ள ஆயத்தமாக இருக்கின்றார்கள். அது வரி என்ற விசயத்தோடு மட்டும் மட்டுப்படுத்துகின்ற விசயம் அல்ல. முஸ்லிம் மக்கள் அப்பகுதியில் உள்ள தமிழ் மக்களுடைய அபிவிருத்தியில் தங்கள் பங்களிப்பைச் செய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள்.

- BBC 30 மார்ச் 2003

மேற்கூறப்பட்ட பேட்டியில் உள்ள இரண்டு விடயங்கள் நமது மக்களின் கவனத்திற்கு உள்ளாகின்றன. கோடிடப்பட்ட இரண்டு விடயங்கள் தொடர்பாக பசீர் சேகுதாவூத் மேலும் தெளிவாக விளக்கமளித்தால் நமது மக்களின் சந்தேகங்கள் தீர்க்கப்படுமல்லவா? பசீர் சேகுதாவூத் இக்கருத்துக்கு விளக்கமளிப்பாரா? எங்கள் நிலங்களில் எங்கள் பாதங்கள்படுவது எவ்வகையிலும் விட்டுக் கொடுக்க முடியாத எமது உரிமை என்பதை நமது மக்கள் நன்கு அறிவர்.

## அமைச்சரின் காதல் லீலையும் அதிகாரத் துஷ்பிரயோகமும் ஊழலும்!

எஸ.பி. திசாநாயக்காவுக்குப் பிறகு விளையாட்டு அமைச்சர்களின் ராசியே இப்படித்தான் உள்ளது. அன்று பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் வியைாட்டுத்துறை அமைச்சராகவிருந்த எஸ்.பி திசாநாயக்கா பல்வேறு நிதிமோசடிகளிலும் ஊழல்களிலும் ஈடுபட்டது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிந்த உண்மையாக இருந்தது. ஆனால் அன்று யாரும் எஸ்.பி. திசாநாயக்காவுக்கு எதிராக எதுவுமே செய்ய முடியாமல் இருந்தது. காரணம் அதிகார அம்மணியின் விசுவாசத்திற்குரியவராக திசாநாயக்க இருந்ததுதான். ஆட்சி மாறிய போது சந்திரிகாவினால் கூட எஸ்.பி. திசாநாயக்காவை ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் ரணில் விக்கிரமசிங்காவின் முக்கிய அமைச்சராக எஸ்.பி. திசாநாயக்க இருந்தார். சந்திரிகாவே நேரடியாக ஊழலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டிய போதும் எஸ்.பி.க்கு எதுவுமே நடக்கவில்லை. இரண்டு மூன்று விசாரணைகளைத் தவிர.

திசாநாயக்காவின் காலத்தில். அநேக கதைகள் வெளியாகி இருந்தன. ஒட்ட வீராங்கனை சுசந்திகா எஸ்.பி. விவகாரம் - சுசந்திகாவினாலேயே பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டது. பாராளுமன்றத்திலும் இதுபற்றி பல்வேறு தடவைகள் பேசப்பட்டுள்ளன. இப்போது புதிய விளையாட்டு அமைச்சர் ஜோன்ஸ்டன் பொர்ணான்டோ தொடர்பாக பிரச்சினை எழுந்துள்ளது. இப்போதைய விடயம் எந்த விளையாட்டு வீராங்கனையாலும் அல்ல. பிரபல சிங்களப் பாடகி சமிதா ஏரந்தனி உடனானதாகும்.

*யார் யாரைக் காதலித்தாலும் அது எங்களுக்குப் பிரச்சினை அல்ல. அது அவர்களுடைய தனிப்பட்ட உரிமை, ஆனால் அமைச்சர்களின் அதீத ஒழுக்கத்தைப் பற்றி பெரிதாகக் கதைக்கும் இன்றைய அரசாங்கத்தின் நிலையையும் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதே எங்கள் நோக்கம் என்கிறது இச்செய்தியைப் பிரசுரித்திருக்கும் லக்ஜன சிங்கள வார இதழ்.*

நாவல, சேனநாயக்க மாவத்தையில் "கென்வுட்" வீடமைப்புத் திட்டத்தில் 80 இலட்சம் ரூபா பெறுமதியான வீடொன்றை சமிதா வாங்கி உள்ளார். இவ்வீட்டை வாங்குவதற்கு பெருமளவு அரசாங்கப் பணம் வேறுவழியில் எடுக்கப்பட்டு இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவருடைய கணவரான அதுலவுக்கு விளையாட்டு அமைச்சின் சங்கீதப் பிரிவு பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதுலவின் மாதாந்த சம்பளம் 40 ஆயிரம் ரூபாவாகும். இதைவிட ஆடம்பர வாகனம் மற்றும் ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. விளையாட்டு அமைச்சின் கீழ் உள்ள இசை வாத்தியக் கருவி அனைத்தும் இவர்களது சொந்தப் பாவனைக்காக வழங்கப்பட்டுமுள்ளது.

சார்க் மாநாடு தொடங்கப்பட்ட போது அதில் இசைக்கப்பட்டிருந்த ஒரு பாடலுக்கான ஒத்திகைத் தேர்வின் போதே அமைச்சர் ஜோன்ஸ்டன், சமிதா ஆகியோரிடையே உறவு ஏற்பட்டுள்ளது. அதன் பின் அரசாங்கப் பணம் சமீதாவுக்கு வாரி இறைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி பல்வேறு விபரங்களை ஏற்கனவே லங்காதீப பத்திரிகையில், ரஞ்ஜித் ஆனந்த ஜயசிங்க என்பவர் முக்கிய புள்ளிகளின் ஊழல் மோசடிகளை பொதுமக்களுக்கு பகிரங்கப் படுத்தும் பக்கத்தில் எழுதி உள்ளார். இவ்விடயங்கள் வெளிவந்தபின் பிரதமர் ரணில் அவரது செயலாளர் ஊடாக அமைச்சர் ஜோன்ஸடன் பொர்ணான்டோவுக்கு கண்டிப்பான எச்சரிக்கையை வழங்கியுள்ளார்.

*லக்ஜன பத்திரிகை,*
*23.03.2003 தமிழில்: எம்.இஸட். துவான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடந்ததும், நடப்பதுமென்ன?

நமது மக்களுக்கான தனித்துவமான அரசியல் போராட்டம் என்பது ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மாற்றான ஒரு அரசியல் கட்சியை தோற்றுவிப்பதல்ல; அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலும் பிற கட்சிகளிலும் பாரம்பரியமாக அங்கத்துவம் பெற்றிருந்த நமது முஸ்லிம் மக்களை-புதியதொரு அரசியல் கட்சியை உருவாக்கி அதில் அங்கத்தவர்களாக சேர்ப்பதுமல்ல.

1985 இல் மிக வேகமாக மாறத் தொடங்கிய நமது அரசியல் சூழல் நமது மக்களின் அரசியல் தலைவர்கள் என இதுவரை வீற்றிருந்தவர்களை கணிசமாக நிராகரித்தது. மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு விட்டுக் கொடுக்காமல் குரல் எழுப்பும் - அதற்காக போராடும் அரசியல் தலைமையை நமது சமூகம் வேண்டி நின்றது.

அந்த அபிலாஷைகளின் வழியேதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது- இத்தனித்த அரசியல் இயக்கத்தில் இருந்தவர்களும் இருந்து பிரிந்தவர்களும்தான் இன்று பாராளுமன்றத்தில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைவர்களாக இருக்கிறார்கள்.

வரலாற்றை இன்று, இம் முக்கிய சந்தர்ப்பத்தில் - பின்னோக்கிப் பார்த்தால் -1985இன் அரசியல் காலகட்டத்திற்கும் இன்றைக்கும் எந்த அரசியல் வித்தியாசமும் இல்லையென் பதை தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது. மிகத்துல்லியமான வெளிப்பாடாக அன்று இருந்த தலைவர்களுக்கும் இன்றிருக்கும் தலைவர்களுக்குமிடையே சொந்தப் பெயர்களையும், கட்சிகளின் பெயர்களையும் தவிர வேறெந்த வித்தியாசமுமில்லை.

உரிமைப் போராட்டம், பேராளிகள் என நமது அரசியல் அரங்கு கடந்த 17 வருடமாக அல்லோல கல்லோலப்பட்டு வந்திருக்கிறது. "சலசலப்பைத்தான் கண்டோம், பலகாரத்தைக் காணவில்லை" என்பதுவே நமது நிலையாக உள்ளது. ஏன் நாங்கள் காணவில்லை? என்ற எதிர்க் குரல்கள் ஒலிப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. நமது உரிமைப் போராட்டத்தில் நமது இலட்சியங்கள், உன்னத இலக்குகள் நிலைநாட்டப்பட்ட கட்டங்களை அவர்களால் கூற முடியுமா எனக் கேட்டால் மௌனமே பதிலாக வரும்.

1994களுக்குப்பின் பௌதீக அபிவிருத்தியை நாம் கண்டுள்ளோம். கட்டிடங்கள் கட்டியுள்ளோம். அபிவிருத்திகள் செய்துள்ளோம். ஆயிரக்கணக்கில் தொழில் வழங்கி உள்ளோம் என்பது நமது அரசியல் நிலைப்பாடுகளை வெற்றி பெற வைத்துள்ளதா?

ஒரு அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு மிகப்பெரும் பங்காற்றிய முஸ்லிம் மக்களுக்கு - நீண்டகாலமாய் அபிவிருத்தியில், தொழில்வாய்ப்பில் வளப் பங்கீட்டில் புறம் தள்ளப்பட்ட நமது மக்களுக்கு நீதி செய்யும் வகையில் ஆட்சி அதிகாரத்தை மத்தியில் ஏற்படுத்துவதற்கு வழங்கிய வாக்குப்பல ஆதரவிற்கு நமது மக்களுக்குச் செய்த கைமாறுதான் இவைகள்! இவைகள் அரசாங்கப் புண்ணியத்தால் நமக்கு இட்ட பிச்சை என நாம் ஏன் நம்ப வேண்டும்?

நமது மக்களின் வாக்குப் பலம் தந்த ஆதரவின் காரணமாக மத்தியில் உள்ள ஆட்சி அதிகாரத் தரப்புடன் பேரம்பேசி செய்யப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்கு பிரதான பலம் நமது மக்கள்தான். நமது மக்கள் ஒன்றுபட்டு ஆதரவு தந்ததற்கான கைமாறுதான் இப் பௌதீக அபிவிருத்தியும் தொழில் வாய்ப்புகளும். இவைகள் மட்டும் ஒரு சமூகம் நிம்மதியாக வாழ்வதற்கு போதுமானவையா? இந்த நாட்டில் தமிழர்கள் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு குரல் எழுப்ப தலைவர்களும், கட்சிகளும் இருந்தன. பதியுதீன் மஹ்மூத் அன்று ஆயிரமாயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பினை அள்ளி வழங்கினார். 1977இல் ஐக்கிய தேசிய கட்சி பதவிக்கு வந்ததிலிருந்து 1994 வரை ஆயிரமாயிரம் முஸ்லிம்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கியது. பல பிரதேசங்கள் அபிவிருத்தி கண்டன. இவைகள் நடந்து கொண்டிருந்த போதும் ஏன் நாம் நமக்கான தனித்துவமான அரசியல் கட்சியொன்றை உருவாக்குவதில் உறுதியாக நின்றோம். இந்த நாட்டில் சிங்கள மக்களின் நலன்களும் உரிமைகளும் பாதிக்கப்படும் போது அவர்களுக்கு குரல் எழுப்ப தலைவர்களும் கட்சிகளும் இருந்தன. - முஸ்லிம்கள் பாதிக்கப்படும்போது அவர்களுக்காக குரல் எழுப்ப யாருமே இல்லையே என்ற நீண்ட வரலாற்று அவலத்தின் பின்தான் நமக்கான கட்சி உதயமானது.

17 வருட தனிக்கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை நாம் இங்கு விமர்சிக்க வரவில்லை. அந்த தனித்துவமான அரசியல் பயணத்தின் ஊடாக நாம் பெற்றது என்ன என்பதை சீர்தூக்கிப் பார்க்கவே முயல்கிறோம். நமது தனித்துவமான அரசியல் கட்சியின் நிலைப்பாடுகள் என்ன? எதற்காக நமது மக்கள் நமது கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்தார்கள்?

1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு வடக்கு கிழக்கு என்பது ஒரு தனித்த மாகாணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு முஸ்லிம் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் நிராகரிக்கப்பட்டன. வாழ்வுக்கும் இருப்புக்குமான அச்சுறுத்தல் நமது மக்களை நெருக்கியது. இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான்- முஸ்லிம்களின் சுயநிர்ணயம், முஸ்லிம்களின் தாயகம், என்பவற்றின் அடிப்படையில், முஸ்லிம் மாகாணம் என்ற அரசியல் ஏற்பாட்டை முன்வைத்து நமது மக்கள் பெருவாரியாக ஆணை வழங்கினர்.

இன்று இந்த சமாதானப் பேச்சுவார்த்தைச் சூழலில் முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது. நாம் கேட்கிறோம் - அன்று இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் - முஸ்லிம்களை கையாண்ட பேரினவாத அரசியல் சக்திகளின் கையாள்கைக்கும், இன்றைய பேரினவாத அரசியல் சக்திகளின் கையாள்கைக்கும், என்ன வித்தியாசமுள்ளது?

முஸ்லிம்கள் தனித்த தேசிய இனம் என்பதை மறுக்கிறார்கள். "முஸ்லிம்களுக்கு தாயக உரிமை உள்ளது என்பதை மறுக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு தனித்த அதிகார அலகு இல்லை" என வெளிப்படையாகச் சொல்லி விட்டார்கள்.

இம் மிக முக்கியமான முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை நிராகரித்து பேச்சு மேசையில் முஸ்லிம்களை - தனித்தரப்பாக அங்கீகரிக்க முடியாது எனவும் சொல்லி விட்டார்கள்.

இது நமக்கு வெளியான ஆதிக்க சக்திகளின் அதிகாரக் குரல். நமது அக அரசியலினுள் வீராவேசம் பேசி, போராட்டத்திற்கு புறப்பட்ட செம்மல்கள் முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடுகளை ஆணித்தரமாக முன்வைக்காது - யாரை யாரையோ நம்பி இருக்கிறோம் என காலத்திற்கு காலம் மக்களிடம் சொல்லி, தங்களுக்குள் குடுமிச் சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

பாருங்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும், ஆளுங்கட்சியில் இருந்தாலும் நமது மக்களுக்கும் போராடுவதற்கு நெஞ்சை நிமிர்த்தி அரசியல் தெளிவுடன் வருவதற்கு யாருமே தயாராக இல்லை. இதேவேளை அணிகளுக்குள் அணி, மீண்டும் புதியதொரு அணியென தங்களது அரசியல் அதிகாரங்களை உறுதிப்படுத்த உள்ளுக்குள் முயற்சிகளும் அரங்கேற்றங்களும் நடக்கின்றன.


இப்போது இந்நாடகம் முற்றுப் பெறும் கட்டம் வந்துவிட்டது. இறுதியாக 7ம் கட்டப் பேச்சுவார்த்தை மேசையில்தான் இவர்களை நிரூபிக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. அனைத்து தலைமைகளும் நமது மக்களுக்கு வாக்குறுதிகளை தந்து விட்டிருக்கின்றன. - முஸ்லிம் மாகாணம் தொடக்கம் தனித்துவத் தரப்பு வரை.

ஏப்ரல் மாதப்பகுதியில் 7ம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாகத் தெரிகிறது. ஆகவே ஏப்ரல் இரண்டாம் வாரமளவில் நமது தலைமைகள் நமது மக்களுக்கு வழங்கிய தனித்தரப்பு வாக்குறுதிக்கு என்ன நடந்திருக்கிறது என்பது தெரிய வந்துவிடும். உண்மையாக நமது மக்களுக்காக இவர்கள் போராடப் போகிறார்களா? அல்லது மீண்டுமொரு நொண்டிச் சாட்டை முன்வைத்து தங்களுக்கான பணியிலிருந்து நழுவி விடப் போகிறார்களா என்பதை அண்மிக்கும் நாட்கள் நமக்கு தெளிவுபடுத்த உள்ளன.

-பையூஸ் அஹமட்

# மட்டக்களப்பில் கடத்தப்பட்ட கொழும்பு முஸ்லிம் இளைஞர்கள் விடுவிக்கப்படவேண்டும். MULF பத்திரிகையாளர் மகாநாட்டில்....

கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வைத்து வாகனங்களுடன் கடத்திச் செல்லப்பட்ட நான்கு முஸ்லிம் இளைஞர்களின் நிலை குறித்து அறிந்து கொள்வதற்காக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியினால் பத்திரிகையாளர் மகாநாடு நடத்தப்பட்டது.



சமாதான சூழல் நிலவும் காலத்தில் மட்டக்களப்புக்கு செல்வதற்கு வாடகைக்கு வாகனங்களை அமர்த்தி அங்கு சென்ற போது வாகனங்களுடன் இவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பான உறுதியான முடிவுகள் இதுவரை தெரியவில்லை. இதனால் இவர்களின் குடும்பங்கள் பலத்த துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாகியுள்ளன.

இவர்கள் கடத்தப்பட்டதன் பின் இவர்களது குடும்பத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு சென்று இவர்களை விடுவிக்குமாறு கோரியுள்ளனர். அப்போது புலிகளின் முக்கியஸ்தர்கள் அவர்களை விரைவில் விடுவிப்பதாகவும் கூறியுள்ளனர். கடத்தப்பட்ட ஒரு வாகனத்தையும் அதே தினம் இவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் கண்டுமுள்ளனர். இது வரை இவர்கள் வீடு திரும்ப வில்லை. பல்வேறு மனித உரிமை அமைப்புகள், அப்பிரதேச அரசியல் வாதிகள், மத நிறுவனங்களுடன் முறைப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் முஸ்லிம் இளைஞர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் துர்ப்பாக்கியத்தை தெரியப்படுத்துவதற்காகவே இப்பத்திரிகையாளர் மகாநாடு நடாத்தப்படுவதாக MULF தலைவர் S.N.M. மௌலானா தெரிவித்தார்.

கடத்தப்பட்டவர்களில் முஹம்மது இம்தியாஸ் என்பவர் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் உயர்பீட உறுப்பினராவார். புலிகள் இவர்கள் தொடர்பான முடிவினை விரைவில் தெரிவிக்க வேண்டும் என கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

1990ம் ஆண்டு வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வெளியேற்றப் பட்டதன் பின்பு மன்னார் மாவட்டத்தில் உள்ள வேப்பங்குளம் பள்ளிவாசலின் நிலையே இது.



# தப்பியோடுவதற்கு விடமாட்டோம்.!

ஈராக் வெளிநாட்டமைச்சர் நாஜி சப்ரி பத்திரிகையாளர் மாநாட்டில் கூறுகையில் "நாங்கள் இந்தப் பாலைவனத்தை அமெரிக்கர்களுக்கும் பிரித்தானியர்களுக்கும் அடக்கஸ்தலமாக மாற்றிக் காட்டுவோம். இந்த அரக்கர்கள் இந்த நாட்டிலிருந்து தப்பியோடுவதற்கு முயற்சித்தாலும் வெகு இலகுவில் அவர்களை விடமாட்டோம். அமெரிக்க, பிரித்தானியப் படையினர்களை எங்களிடம் வந்து சரணடையும்படி வேண்டுகோள் விடுக்கின்றோம். ஏனெனில் அவர்கள் ஒவ்வொரு நாளும் பல நூற்றுக்கணக்கான உயிர்களையும் ஆயுதங்களையும் இழந்து படுதோல்வியை அடைந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் சரணடைந்து கொள்வது அவர்களுக்கு சிறந்ததாக இருக்கும். அமெரிக்க படையினர்களுக்கு இடம்கொடுத்து அவர்களுக்குப் பின்னால் வால்பிடித்துத் திரிகின்ற சில நாடுகளை வன்மையாக எச்சரிக்கை செய்கின்றேன். இப்படிப்பட்ட சமுதாயத் துரோகிகள் எதிர்வரும் காலத்தில் கடுமையான முறையில் தண்டிக்கப்படுவார்கள். ஈராக் மக்களுக்கு சார்பாக அனுதாபம் தெரிவித்து பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் செய்து உலக மக்களுக்கு உண்மையை எடுத்துக்காட்டி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையிட்டு ஈராக் மக்களின் சார்பாகவும் ஜனாதிபதி சதாம் ஹுஸைன் அவர்கள் சார்பாகவும் நன்றியைத் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஈராக்கிய படையினரால் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் பதினொரு அமெரிக்க படையினர் கொல்லப்பட்டு ஏனையோர் காயமடைந்துள்ளனர். ஆகவே இப்படிப்பட்ட தற்கொலைத் தாக்குதலிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்வது என்று அமெரிக்கப் பிரித்தானியப் படையினர்கள் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறார்கள்.

தற்கொலைத் தாக்குதலுக்கு பயந்த ஆக்கிரமிப்பு இராணுவம் அப்பாவி மக்களை கொன்று வருவதாக தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

ஈராக் தொலைக்காட்சியில் "தற்கொலைத் தாக்குதல் நடத்திய அலி ஹுமாதி என்பவர் அமெரிக்கப் படையினர்களுக்கு நல்லதொரு பாடத்தைப் புகட்ட வேண்டும் என்பதற்காக தனது உயிரை அர்ப்பணித்து வீரமரணடைந்தார். அவர் ஜனாதிபதி சதாம்" ஹுஸைன் அவர்களால் உன்னத விருது ஒன்று வழங்கி கௌரவிக்கப்பட்டார். அமெரிக்கப் பிரித்தானிய படையினர்கள் இப்படியொரு தற்கொலைத் தாக்குதலை தாங்கிக் கொள்ள முடியாவிட்டால் அவர்கள் பொதிகளை எடுத்துக் கொண்டு அவர்கள் வீடுகளுக்குச் செல்லட்டும். என்று தெரிவிக்கப்பட்டது.

ஈராக் இராணுவப் பேச்சாளர் குறிப்பிடுகையில் அவர்கள் அவ்வாறு நடக்காவிட்டால் ஈராக் நாட்டிலுள்ள ஆண்களும் பெண்களும் அவர்களுடன் சேர்ந்து வீரத்தியாகத்தில் ஈடுபடுவதற்காக வந்த அரபுச் சகோதரர்களும் அமெரிக்கப் பிரித்தானியப் படைகளுக்கு எதிராக தற்கொலைத் தாக்குதல் நடத்துவார்கள் என்று கூறினார். மேலும் கூறுகையில் 5000க்கும் மேற்பட்ட அரபுச் சகோதரர்கள் பல நாடுகளிலிருந்து அல்லாஹ்வின் பாதையில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக புனிதப் போர் செய்வதற்காக இங்கு வந்துள்ளார்கள் என்றும் ஈராக் இராணுவப் பேச்சாளர் ஹாஸிம் அர் ராவி கூறினார்.

அமெரிக்க ஜெனரல் ஒருவர் கூறுகையில், ஈராக் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள நாஸிரிய்யா எனும் நகரத்தில் அமெரிக்கப் படையினரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக கட்டாரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட மேஜர் ஜெனரல் விக்டர் ரின்வாட் கூறினார். அமெரிக்கப் படையினர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டது பற்றி கேட்கப்பட்ட போது அதற்கு அவர் பதிலளிக்கையில் அந்த படையினர் காணாமல் போயிருந்தனர் என்பதாக கூறினார். எட்டு அமெரிக்கப் படையினர் இன்னும் காணாமல் போயுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனில் இயங்குகின்ற ஜிஹாத் அமைப்பிலிருந்து பல நூற்றுக்கணக்கானோர் ஈராக் சென்றுள்ளதாக அவ்வியக்க தலைவர் தெரிவித்தார். எகிப்து நாட்டிலுள்ள அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் தலைவரான அஷ்ஷெய்க் தந்தாவி அவர்களும் அந்நாட்டின் முப்தியும் அமெரிக்காவிற்கு எதிராக ஜிஹாத் செய்ய முன்வருமாறு அனைத்து உலக முஸ்லிம் மக்களை வேண்டிக்கொண்டார்.

சிரிய நாட்டு முப்தியான அஷ்ஷெய்க் அஹ்மத் குப்தார் கூறுகையில் பலஸ்தீனத்தில் நடைபெறுகின்ற அக்கிரமங்களையும் அட்டூழியங்களையும் நிறுத்துவதற்கு ஈராக்கிற்கு எதிராக போர் புரிகின்ற அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஜிஹாத் செய்ய முன்வருமாறு அனைத்துலக முஸ்லிம் மக்களையும் கேட்டுக்கொண்டார்.

31-03-2003

அரப் ஒன் லைன்











ஈராக் அதிபர் சதாம் அவர்கள் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதையும் பொது மக்கள் உடையில் மக்களுக்குள் நுழைந்த அமெரிக்க இராணுவ உளவாளி ஒருவரை ஈராக்கிய பொது மக்கள் பிடித்துச் செல்வதையும் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானத்தின் இரு விமானிகளையும் வீரத்தியாகமடைந்த ஈராக்கிய போர்வீரர் ஒருவரை பெருமளவிலான மக்கள் சுமந்து செல்வதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய சமூக வாழ்வில் மக்கள் கூட்டு வேலைத்திட்டம்

இலங்கையின் வேறு எப்பாகத்திலும் இல்லாதவாறு காத்தான்குடிப் பிரதேசத்தில் 1985ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு மிகச் சிறந்த திட்டமிடலுடனும் சரியான வழிகாட்டுதலுடனும் வெற்றிகரமாக முன்னேறிச் செல்லும் சமூக மறுமலர்ச்சி அமைப்புத்தான் இந்த சம்மேளனமாகும். இந்நிறுவனமானது பல வெற்றிகரமான செயற்பாடுகளினால் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்று நம்பிக்கைக்குரிய நிறுவனமாகத் திகழ்கிறது.

இப்பிரதேசத்தில் உள்ள சுமார் 40 பள்ளிவாயல்களையும், 80 முஸ்லிம் நிறுவனங்களையும் உள்ளடக்கிச் செயற்படும் இந்நிறுவனமானது பிரதேசத்தின் சகல நடவடிக்கைகளிலும் கால்பதித்துப் பணி செய்வதில் அயராது ஈடுபட்டு வருகின்றது.

மக்களது சுக துக்கங்களில் பங்கு கொண்டு அவர்களது துன்ப துயரங்களைப் போக்கும் பெரும் பணியோடு கல்வி, கலாசாரம், சமயம், அரசியல், பொருளியல், சுகாதாரம் போன்ற எல்லாத்துறைகளிலும் முழுமையான பங்களிப்பைச் செய்து வருகின்றது.

இதன் அண்மைக்காலச் செயற்பாடுகளில்

- கூட்டு ஸக்காத் திட்டம்
- கூட்டு உழ்ஹிய்யா திட்டம்
- பள்ளிவாயல் கட்டட நிதி சேகரிப்புத்

திட்டம் என்பன மிகப்பாரிய வெற்றி கண்டுள்ள திட்டங்களாகும்.

## கூட்டு ஸக்காத்

மேற்படி சம்மேளனத்தினால் இவ்வருடம் ஸக்காத் கூட்டாகச் சேகரித்து விநியோகிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்காக காத்தான்குடி ஜாமி அதுல்பலாஹ் அதிபர் சங்கைக்குரிய ஷைகுல் பலாஹ் அப்துல்லாஹ் அவர்களின் தலைமையிலான உலமாக்கள் குழுவும் சம்மேளன உபகுழுவும் இணைந்து முயற்சி களை மேற்கொண்டன. இவ்வாறு செல்வந்தர்களிடமிருந்து ஸக்காத் சேகரிக் கும் பொறுப்பு பள்ளிவாயல்கள் நிர்வாக த்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைவாக இம்முறை (சென்ற றமழானின் போது) சுமார் 60 லட்சம் ரூபா சேகரிக்கப்பட்டது. இதன்படி ஏற்கனவே உதவி கோரி சம்மேளனத்திடம் விண்ணப்பித்த குடும்பங்களின் விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கு அவை பின்வரும் முறைக்கு அமைவாக பகிர்ந்தளி க்கப்பட்டன.

1. கிணறு, மலசல கூடம் என்பன அமைக்க முடியாமல் கஷ்டப்படும் குடும்பங்களிற்கு அவற்றை அமைத்துக் கொள்வதற்காக உதவுதல்.
2. குறை நிலையிலுள்ள வீடுகளை பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படும் குடும்பங்களின் வீடுகளை பூரணப்படுத்துவதற்கு உதவுதல்.
3. பல வயது வந்த பெண்பிள்ளைகளை கொண்டு கஷ்டப்படும் குடும்பங்களின் வீடுகளையும் பூர்த்தி செய்து அவர்களது திருமணத்திற்காக உதவுதல்.
4. தொழில் முயற்சிகளிற்காக முதலீடு இன்றி கஷ்டப்படும் ஏழைக் குடும்பங்களின் முயற்சிகளிற்கு உதவுதல்.
5. கடன்பெற்ற நிலையில் அதனை மீளச் செலுத்த முடியாது அவதியுறும் ஏழைக் குடும்பங்களிற்கு கடனை நிறைவேற்ற உதவுதல்
6. புதிதாக இஸ்லாத்தை ஏற்று கொண்டவர்களிற்கான வசதிகளை செய்து கொடுத்தல்.

போன்ற பல தேவைகளுக்காக இந்நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதற்கமைவாக புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்களுக்காக ரூபா 15 இலட்சமும், 12 யுவதிகளின் திருமண த்திற்காக ரூபா 12 இலட்சமும், மற்றும் கிணறு கட்டுவதற்காக 60 குடும்பங்களுக்கும், மலச லகூடம் அமைப்பதற்காக 39 குடும்பங்க ளுக்கும், வீடு பூரணப்படுத்துவதற்காக 58 குடும்பங்களுக்கும், தொழில் முயற்சிகளு க்காக 155 குடும்பங்களுக்கும், கடனை மீளச் செலுத்துவதற்காக 38 குடும்பங்களுக்கும், மேற்படி கூட்டு ஸக்காத் நிதி பயன்படுத்தப்பட்டது.

வழமையான தனிநபர் ஸக்காத் விநியோகத்தை விடவும் இம்முறை வழங்கப்பட்ட கூட்டு ஸக்காத் திட்டத்தின் மூலம் அநேகமான வறிய குடும்பங்கள் முழுமையான நன்மைகளைப் பெற்றிருக்கின்றன. தங்களது சொந்தக் காலில் வாழ்க்கையை தொடர முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அதிகமானவர்கள் உதவி கோரி விண்ணப்பித்திருந்த போதிலும் எஞ்சியவர்களது தேவைகள் அடுத்த அடுத்த வருடங்களில் படிப்படியாக நிறைவு செய்யப் படும் என சம்மேளனத்தில் உப தலைவரும் பிரதேச காதி நீதிபதியுமான அல்ஹாஜ் எம்.ரி.எம். காலித் J.P. தெரிவித்தார்.

## முஸ்லிம் பிரதேசங்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்

## கூட்டு உழ்ஹிய்யா

கூட்டு உழ்ஹிய்யா செயற்றிட்டமானது பல வருடமாக இப்பிரதேசத்தில் நடைமுறையில் இருந்து வருகின்ற போதும் இம்முறை அது சம்மேளனத்தின் பங்களிப்பின் காரணமாக பெரும் வெற்றி கண்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் சங்கைக்குரிய ஷைகுல் பலாஹ் அவர்கள் இதனை தனியாக செயற்படுத்திக் கொண்டிருந்தார்கள். கடந்த 4 வருடங்களாக சம்மேளனம் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் உழ்ஹிய்யா விநியோகம் பரந்த அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

உழ்ஹிய்யாவுக்கான மாடுகளை வழங்குவதில் உள்ளூர் தனவந்தர்களோடு முஸ்லிம் AIDS எனும் நிறுவனமும் இதற்கு பல வருடங்களாக பங்களிப்புச் செய்து வருகிறது. அத்தோடு காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலையம், அர்ரஹ்மா புறஜக்ட் நிறுவனம், தாருல் அர்ஹம் நிறுவனம் என்பனவும் இதற்குப் பங்களிப்புச் செய்து வருகின்றன.

இவ்வாறு பெறப்படும் நூற்றுக்கணக்கான மாடுகளைக் கொண்டு காத்தான்குடி, புதிய காத்தான்குடி, காங்கேயனோடை, பாலமுனை, கீச்சான்பள்ளம், கர்பலா நகர், பூநொச்சி முனை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலுள்ள சகல குடும்பங்களுக்கும் உழ்ஹிய்யா இறைச்சி விநியோகிக்கப்படுகிறது.

சகல பள்ளிவாயல்களும் இப்பணியில் மிகுந்த ஆர்வத்தோடு பங்கு கொள்வதோடு உழ்ஹிய்யாவுக்கான மாடுகளை கொள்வனவு செய்வதிலும் மற்றும் பணிகளிலும் பல தொண்டர்கள் தியாக உணர்வுடன் செயற்படுகின்றனர்.

இதன் அடிப்படையில் இம்முறை சுமார் 120 மாடுகள் அறுக்கப்பட்டு உழ்ஹிய்யா கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## பள்ளிவாயல் கட்டிட நிதி சேகரிப்புத் திட்டம்

காத்தான்குடிப் பிரதேசத்தில் உள்ள கட்டி முடிக்கப்படாத பள்ளிவாயல்களின் நலன்கருதி அவற்றை பூர்த்தி செய்யும் புதிய திட்டம் ஒன்றையும் சம்மேளனம் அறிமுகம் செய்துள்ளது. அதன் அடிப்படையில் இருவருட காலத்திட்டத்தில் இரு பள்ளிவாயல்கள் புனரமைக்கப்படும். இதற்காக ஒவ்வொரு வாரமும் ஜும்ஆவின் போது காத்தான்குடியிலுள்ள சகல ஜும்ஆப் பள்ளிவாயல்களிலும் நிதி சேகரிக்கப்படும். அவ்வாறு முதல் ஒரு மாதம் சேகரிக்கப்படும் நிதிகள் யாவும் ஒரு பள்ளிவாயலுக்கும், அடுத்த மாதம் சேகரிக்கப்படும் நிதிகள் யாவும் இரண்டாவது பள்ளிவாயலுக்கும் என மாறி மாறி தொடர்ச்சியாக பள்ளிவாயல்கள் புனரைமக்கப் பயன்படுத்தப்படும்.

மேற்படி திட்டத்திற்கமைவாக கடந்த மாதம் முதன்முதலாக புதிய காத்தான்குடி பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயலுக்கான நிதி சேகரிக்கப்பட்டபோது மூன்று வாரங்களில் மாத்திரம் ஒரு லட்சத்து நான்காயிரத்து முந்நூற்றி எண்பது ரூபா பெறப்பட்டது.

இரண்டாவது பள்ளிவாயலான புதிய காத்தான்குடி நூறாணிய்யா ஜும்ஆப் பள்ளிவாயலுக்கும் முதல் வாரத்திலேயே (ஒரு ஜும்ஆவில் மட்டும்) முப்பத்தையாயிர த்து ஐந்நூற்று எழுபது ரூபா (35570/=) கிடைக்கப்பெற்றது.

மேற்படி திட்டங்களின் மூலம் தாங்கள் எதிர்பார்த்ததை விடவும் பன்மடங்கு சாதித்திருப்பதாக காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவிக்கின்றது. இம்முயற்சி நமது சமூகத்திற்கு முன்மாதிரியாக உள்ளது. ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்களிலும் இது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

**S.A.H.A. மஜீத் – ஏறாவூர்**

# பெற்றது நீங்கள் வளர்ப்பது 'அவர்கள்'

சிறார்கள் என்றாலே அவர்களின் இயல்பான தேவையும், ஆசையும் ஆவலும் இரண்டே விசயங்களில்தான். தின்பண்டங்கள், விளையாட்டு, மற்ற விசயங்கள் எல்லாம் அப்புறந்தான். இவை இரண்டும் கிடைத்துவிட்டால் போதும், அவர்கள் இந்த உலகத்தையே மறந்து விடுவார்கள். பெற்ற தாய் - தந்தையையும் கூட.

பள்ளிக்குப் போய்வர மறுக்கும் சிறுமிக்குச் சொல்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

மலைவாழை அல்லவோ கல்வி – நீ
வாயார உண்ணுவாய்
போ என் புதல்வி.

கல்வியைக்கூட ஒரு தின்பண்டமாய்ச் சொல்லி ஏற்க வைக்கும் முயற்சி. அது மட்டுமல்ல, கடினமான கல்வியைக்கூட விளையாட்டு மூலம் விளையாட்டாய்ச் சொல்லித்தரும் முயற்சியும் உண்டு.

விளையாட்டின் மீதும், தின்பண்டங்களின் மீதும் சிறார்களுக்குள்ள ஆவலைக் கொண்டு அவர்களை நல்வழிப்படுத்துவதும் நல்திசையில் முடுக்கிவிடுவது ஆரோக்கியமான ஆக்கபூர்வமான மனிதர்களின் சிந்தனை. ஆனால் அவர்களின் விளையாட்டுப் புத்தியை வெறும் வன்முறை சார்ந்த வியாபார வெளியாக மாற்றுவது கேடானது. இது சமூகத்துக்கு எதிராகவே ஏவிவிடும் கொடிய குரூரமான சிந்தனை.

தம்சுயநலனுக்காகச் சிறார்களை அடிமைகளாகவும் வன்முறை சார்ந்த விளையாட்டு ஆர்வலர்களாகவும் மாற்றும் செயலை இப்போது சமூக விரோத கிரிமினல்களான ஒரு தனிநபரோ, ஒரு சிறு குழுவோ மட்டும் செய்யவில்லை. அனைத்துச் செல்வாக்கும் பெற்ற, சட்டபூர்வ சமூக அங்கீகாரம் பெற்ற பன்னாட்டுக் கம்பெனிகள் செய்கின்றன.

பன்னாட்டு, தேசங்கடந்த தொழில் கம்பனிகளைப் பொறுத்தவரை அவை உள்ளூர் வியாபரிகளைப் போல ஏதோ ஒரு குத்து மதிப்பாகக் கண்ணை மூடிக் கொண்டு காத்திருப்பதில்லை. வந்த வரை இலாபமென்று விசிறி வீசிக் கொண்டிருப்பதில்லை. வியாபாரத்தைத் தொடங்கு முன்பே என்ன சந்தை வாய்ப்பிருக்கிறது என்று சந்தை வல்லுநர்களை வைத்து மதிப்பீடு செய்கின்றன. அதைக் கொண்டு வியாபாரம் தொடங்கி, பிறகு வியாபாரத்தில் நிலைத்து நிற்கவும், சந்தையை மேலும் மேலும் விரிவுபடுத்தவும் புதுப் புது உத்திகளை வகுக்கின்றன.

உலகின் மேலை பணக்கார நாடுகளைப் போலவே பின்தங்கிய, ஏழை நாடுகளில் மிகப் பெரிய நுகர்வோர் சந்தை இருப்பதைக் கண்டுகொண்டார்கள். அதிலும் கணிசமான அளவு சிறார் சந்தை தென்னாசிய சந்தையில் 25 முதல் 30 சதவீதமானவை 5 வயது முதல் 14 வயது வரையிலான சிறுவர் சந்தை. இதைக் குறிவைத்தாலே பெரும் இலாபம் குவிக்க முடியும். அதிலும் குறிப்பாக மாதம் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் குடும்பங்கள் மட்டும் பல இலட்சங்கள் இருக்கின்றன. அக்குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு சிறுவன் அல்லது சிறுமி இருக்கிறார்கள். இவர்களைத் தாம் உற்பத்தி செய்யும் தின்பண்டங்கள், விளையாட்டுப் பொருட்களின் மீது பைத்தியங்கொள்ளும்படி செய்து விட்டால் போதும் கோடி கோடியாகப் பணமழை பெய்யும் என்று சில பன்னாட்டு, தேசங்கடந்த தொழிற்கம்பனிகள் கண்டு கொண்டு விட்டன.

சிறார்களின் நச்சரிக்கும் சக்தி இருக்கிறதே, அது சந்தையைப் பிடிப்பதற்கு மிகவும் வசதியான வழிவகை. அதற்கு மசியாத பெற்றோர்கள் நிரம்பவும் குறைவு. பரம ஏழையான தாய் - தந்தையானாலும் தமது பிள்ளைகள் நச்சரிக்கும் போது பத்துக் காசுக்கு மலிவான மிட்டாய், முறுக்காவது வாங்கிக் கொடுத்து விடுவார்கள். நச்சரிக்கவே வேண்டாம். ஆசைப்பாட்டாலோ, அடம்பிடித்தாலோ ஆயிரம் ரூபாய்க்கும் விளையாட்டுப் பொருளை வாங்கித்தரும் பணக்காரப் பெற்றோரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பொருட்களின் மீதுள்ள ஆவலை விட, அவற்றோடு தரும் விளையாட்டு இலவசங்கள் மீது மோகத்தை ஊட்டி வளர்ப்பது சந்தையை விரிவுபடுத்தும் எளிதான வழியாக மாறிவிட்டது. கிரிக்கெட், டென்னிஸ், கூடைப்பந்து, கால் பந்து வீரர்கள், பிரபல "ஹொலிவூட்" நடிகர் - நடிகைகள், இயக்குநர்கள், குத்துச்சண்டை வீரர்கள் படங்கள் அச்சிட்ட அட்டைகளை இலவசமாகத் தருவது. பிராணிகளின் (ஸ்டிக்கர்கள்), டயனோசர், கரடிக் குட்டி போன்ற அதிசய விலங்குகளை உடம்பில் பச்சை குத்துவதைப் போல படம் அச்சிடும் ஒட்டிகள் என்று புதுப்புது வடிவங்களில் மெக்டொனால்டு, கோக்கோ கோலா, நெஸ்லே கம்பெனிகள் இலவசமாய்த் தருகின்றன.

மெக்டொனால்டு துரித உணவகத்தில் விற்கும் ஒரு "சந்தோஷ சாப்பாடு" விலை ரூபா 140. பிஸ்ஸா ஹட்டில் விற்கும் "பிஸ்ஸா" விலை ரூ. 120. ஒரு கெண்டுகியில் விற்கும் கோழி வறுவல் விலை ரூ. 160.



ஒரு பிள்ளைக்கு வாரம் ஒரு முறையாவது இவற்றில் ஏதாவது ஒன்று வாங்கித் தருகிறார்கள், நடுத்தர வர்க்கப் பெற்றோர் .மாதம் 500 முதல் 600 ரூபாய் வரைதான் செலவாகிறது. ஆனால் கூடவே தரப்படும் இலவசப் பொருட்களை விளையாட்டுப் பொருள் கடைகளில் வாங்கினால் கூடுதல் செலவாகும் என்று சமாளிக்கிறார் ஒரு தந்தை. ஒருமுறை வாங்கும் பொருளோடு நின்றுபோய்விடக்கூடாது என்பதற்காக சங்கிலித் தொடர் போல் விளையாட்டுக்களை தொகுப்பு சேகரிப்புகளை இலவசமாக கொடுத்து சிறார்களை ஈர்க்கிறார்கள்.

"இதெல்லாம் ஏதோ சிறார்கள் சமாச்சாரம், விளையாட்டுச் சமாச்சாரம், இதில் காசு செலவாகிறது என்பதைத் தவிர முக்கிய விசயம் ஒன்றுமில்லை" என்று ஒதுக்கி விட முடியாது.

"இப்போது விளையாட்டு வீரனுக்குரிய மதிப்பும் கூட பின்னுக்குத் தள்ளப்பட்டு, விளையாட்டு வீரன் அணிந்துள்ள அணிகலன்களின் மதிப்பு, அதன் வியாபாரப் பெயர் முத்திரைக்குத் தான் மதிப்பு. இதன் மூலம் பன்னாட்டு, தேசங் கடந்த தொழில் கம்பனிகள் தமது வியாபார முத்திரையின் மீது ஒருவித மோகத்தை ஏற்படுத்தி, வியாபாரக் கொள்கையை நிரந்தரமாக்குகின்றன.

நடுத்தர, மேட்டுக்குடி வர்க்க சிறார்களின் சந்தையைத் தமது கொள்ளைக்குப் பயன்படுத்தும் அதேசமயம், அவர்களை அமெரிக்கப் பண்பாட்டு வார்ப்படமாக மாற்றிவிடும் நோக்கில் பன்னாட்டு, தேசங்கடந்த தொழில்கம்பனிகள் வியாபாரத்தை முடுக்கி விட்டுள்ளன.

இங்கே நமது நாட்டுத் தலைவர்கள், அறிஞர்கள், நமது நாட்டு விளையாட்டுப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள், நமது நாட்டு ஊர்கள் - நகரங்கள் நமது நாட்டுப் பழக்க வழக்கங்கள் பற்றி எதுவுமே தெரியாத நகர்ப்புற நடுத்தர வர்க்க சிறார்கள், அமெரிக்க ஹொலிவூட் சினிமாக்களையும் ஜிம் கெரி, சில்வஸ்டர் ஸ்டெல்லான், வின்ஸ்லெட், ஆர்னால்டு, வான்டெமி, ஸ்பீல்பார்க், ஜேம்ஸ் கெமரூன் போன்ற பிரபல நடிகர் - நடிகைகள், இயக்குநர்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மைக்கேல் ஜேக்ஸன், பீட் சாம்ராஸ், செரீனா, வீனா வில்லியம்ஸ் சகோதரிகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். உலக அளவில் பிரபலமான கிரிக்கெட் வீரர்கள், உலகக் குத்துச் சண்டை வீரர்களின் தரவரிசையைக் கடகடவென்று ஒப்பிக்கிறார்கள்.


தங்கள் குழந்தைகள் அமெரிக்கப் பண்பாட்டின் கடும் செல்வாக்கில் சிக்கியிருப்பதாக 66 சதவீத ஆசியப் பெற்றோர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்; அவுட்லுக் பசிபிக்கள ஆய்வு நிறுவனம் இணைந்து நடத்திய மதிப்பீடு இப்படிச் சொல்கிறது. "ஒரு வாய்ப்புக் கிடைத்தால் எந்த நாட்டுக்குப் போக விரும்புகிறாய்?" என்று சிறார்களிடம் கேட்டால் மிகப் பெரும்பான்மையினர் "அமெரிக்கா!" என்று கூச்சலிடுகின்றனர்;

சிறார்களின் திண்பண்டங்கள் - உணவு, விளையாட்டு - வேடிக்கை மூலம் அவர்கள் வாழ்க்கை முறை, கல்வி - சிந்தனைமுறை, பண்பாடு எல்லாவற்றையும் உலக மயமாக்குவதில் "கார்ட்டூன் நெட்வொர்க்" என்ற இதனுடன் மற்றபிற அலைவரிசை கள் போட்டி போட முடியவில்லை. இந்த அலைவரிசையின் நிகழ்ச்சிகள் முழுக்கவும் சிறார்களுக்கான கேலிச் சித்திரங்கள்தாம். படிக்கும் பழக்கமும் மாறிவருகிறது. விக்ரமும் வேதாளமும், அம்புலிமாமா, கதை படித்தவர்கள், மார்வின் - மாட்டின், சத்திமான் கதைகள் மீது பைத்தியமாக அலைகிறார்கள்.

டப்பா உணவுதின்று, புட்டி பானங்கள் குடித்து, வானொலி காமிக்குகள் பார்த்து, திகில் கதைகள் படித்து வெறும் வேகம் - வெறிபிடித்த அமெரிக்க சிறார்களின் "குளோன்"களாக உலகம் முழுவதும் உள்ள சிறார்கள் வார்த்தெடுக்கப்படுகிறார்கள். குறிப்பாக ஒரு குழந்தை மட்டுமே உள்ள, தாய் தந்தையர் இருவருமே அலுவலகப் பணியாற்றும் குடும்பங்களில் சிறார்களுக்குக் கேட்டதெல்லாம் கிடைக்கிறது. சிறார்களுடன் செலவழிப்பதற்குப் போதிய நேரம் ஒதுக்க முடியாத பெற்றோர்கள், இதன் மூலம் அதற்கு ஈடுகட்ட முடியும் என்று நம்புகிறார்கள். ஆனால் சிறார்களின் உடலும் உள்ளமும் நாசமடைவதுதான் நடக்கிறது.

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!



சஞ்சிகை :
துயரி
வெளியீடு :
தமிழ்ச்சங்கம் , தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்

"துயரி காலாண்டுச் சஞ்சிகையின் மூன்றாமிதழ் வெளிவந்திருக்கின்றது. இதற்கு முன்னர் வெளிவந்த இரு இதழ்களைப் பார்க்கிலும் அமைப்பிலும், உள்ளடக்கத்திலும் அதிக காத்திரத்தன்மையை இவ்விதழ் கொண்டிருக்கின்றது.

இதழினை விரித்ததும் நம்மை முதல் எதிர்கொள்வது "ஒலுவில் பிரகடனம்" பற்றியதாகும். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒருமகத்தான தொடக்கமாகவும், புது யுகத்தின் எழுச்சியாகவும் மாணவர் சமூகம் தமது சமூகத்தின் மீதான அக்கறையையும் தேவையையும் வீறுகொண்டு பறைசாற்றிய "முஸ்லிம் தேசப் பிரகடனத்தின் விபரங்களே அவை."

இதன் மூலம் சமகால அரசியலில் முஸ்லிம் சமூகத்தின் இன்றியமையா நிலைப்பாட்டினை கோடிட்டுக் காட்டும் பங்களிப்பில் துயரி தன்னையும் இணைத்துக் கொண்டிருக்கின்றது.

எம்.நவாஸ் சௌபி "என் தேசத்தின் இருப்புகள்," எஸ். எம்.அய்யூப் "ஆன்மாவைக் கொல்லுதல்", எம்.எம்.எம். நகீபு "அறுவடை செய்யப்படாத காற்று" றஸாக் முகம்மட் அலி ஆகியோர்களின் கவிதைகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. நமது சமூகத்தின் நிலைகளைப் படம் பிடித்துக் காட்டும் கருப் பொருளில் இக்கவிதைகள் படைக்கப்பட்டிருக்கின்றன. கவித்துவத்தையும் கொண்டிருக்கின்றன.

அப்துல் றஸாக்கின் "கணையாழிக் கனவு" எனும் சிறுகதையை துயரி தாங்கி வந்திருக்கின்றது. நவீன சிறுகதை பாங்கை ஒட்டி இதனையும் படைப்பதில் முழு சிரத்தை எடுத்திருப்பதை கதை புலப்படுத்துகின்றது.

என்.எம். சிராஜ் மஷ்ஹூர் "தமிழ் முஸ்லிம் நல்லுறவு, எங்கிருந்து தொடங்குவது?" யூஎல். முஹம்மட் அஜ்வத் "நினைத்து நிற்கும் அபிவிருத்தி," சரியா ஹாமீம் "பால்வினை வேறுபாடுகள். க.இரகுபரன் "கார சாரம்" - ஒரு சுவையான சொல்லாராய்ச்சி, யூஎல்.அலி ஷக்கி "பிளேட்டோவின் குடியரசில் அழிவும் நம்பிக்கையும்" ஏ.எம்.ஜுனைதா "தமிழில் கணனி பயன்பாட்டில் எதிர்நோக்கும் சவால்கள்" அ.வ.றியலாஸ் "முஸ்லிம் தேசியம் புரிந்து கொள்ளப்படுமா?" ஏ.ஆயிஷா பீவீ" இலக்கியத் திறனாய்வு ஒரு நேர் கோட்டுப் பார்வை" ஆகிய கட்டுரைகளை இவ்விதழில் கொண்டிருக்கின்றது.

கட்டுரைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கருத்துக்களை அர்த்த புஷ்டியுடன் முன்வைப்பதில் முனைப்பு கொண்டிருக்கின்றன. இவற்றில் நமது இன்றைய அரசியலுடன் தொடர்புடைய "முஸ்லிம் தேசியம் புரிந்து கொள்ளப்படுமா?" எனும் கட்டுரை நமது இன்றைய அரசியல் சூழலை எடுத்துக் காட்டுகின்றது. "தமிழ் முஸ்லிம் நல்லுறவு எங்கிருந்து தொடங்குவது?" எனும் கட்டுரையைப் பொறுத்தவரை நல்லுறவுக்காக முஸ்லிம்கள் காட்டிய ஆர்வத்தினையும், அதனை ஆதிக்க மனோநிலையுடைய தமிழர்களினால் எவ்வாறு மீறப்பட்டது என்பதையும் துல்லியமாகப் பேசுகின்றது. அதே நேரம் நல்லுறவு பேணப்படுவதற்கு தமிழர் தரப்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய அம்சங்களையும் சுட்டிக் காட்டுகின்றது.

குர்ஷித்தின் கட்டுரைக்கு ஓர் எதிர்வினை ஒன்றினை ஏ.எல்.ஹஸீன் எழுதியிருப்பதோடு துயரி பற்றிய வாசகர்களின் கடிதங்களும் இடம்பெற்றிருக்கின்றது. எம்.எம்.எம். நகீபு வரைந்த கருத்து மிக்கப்படங்களும், புகைப்படங்களும் துயரியினை மெருகூட்டுகின்றன.

ஒட்டுமொத்தத்தில் துயரியில் உள்ள பெரும் பாலான படைப்புக்கள் கனதியானவை. இலக்கிய உலகில் துயரிக்கு தனியான ஒரு பதிவை எதிர் காலத்தில் தரும் என்ற நம்பிக்கையை எட்டுவனவாகவும் இவ்விதழ் அமைந்துள்ளது.

*- அபூ பாத்திமா பர்வீன்*

**நூல் விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் கட்டாயம் இரு பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும். - பிரதம ஆசிரியர்**

## பத்திரிகை வரலாற்றில் "முஸ்லிம் குரல்" எழுச்சிகரமானதே!

குரலின் நான்கு இதழ்களையும் கண்டு மன மகிழ்ச்சியடைந்தேன். எனது வயது 49. ஏழு எட்டு வயதிலிருந்தே வாசித்து வருகிறேன். நமது "முஸ்லிம் குரல்" பத்திரிகையை வித்தியாசமாகவே காணுகின்றேன். எமது நாட்டைப் பொறுத்தவரை ஏனைய இனங்களுக்கு பலதரப்பட்ட நாளேடுகளும், சஞ்சிகைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனினும் நமது சமூகத்தின் குரலாக தனித்துவமாக ஒரு பத்திரிகை வெளிவராமை ஒரு பெரும் குறையாகவே கொள்ளப்பட்டது. முன்னர் "முஸ்லிம் நேசன்" என்ற பத்திரிகை வெளிவந்த போதிலும் தற்காலத்தில் ஏதும் வெளிவரவில்லை. மாறாக சில சஞ்சிகைகள் வெளிவருகின்ற போதும் முற்று முழுதான அரசியல் தெளிவு வாய்ந்த சமூகப் பின்னணியுடன் கூடிய பத்திரிகை வெளிவரவில்லையென்பது யதார்த்தமாகும்.

பத்திரிகைத்துறையில் எனக்கு "முஸ்லிம் குரல்" ஒரு எழுச்சிகரமான பத்திரிகையாகவே தென்படுகின்றது. பத்திரிகைத்துறையென்பது அவ்வளவு லேசானதொன்றல்ல. ஏனெனில் நானும் உள்ளூர் பத்திரிகையொன்றை சில வருடங்கள் எழுதிவெளியிட்டு பொருளாதாரப் பிரச்சினை காரணமாக இடைநிறுத்தியவன் என்ற படியால் அதிலுள்ள கஸ்டங்களை அறிவேன்.

இன்றைய நிலையில் "முஸ்லிம் குரல்" பல முனைகளிலிருந்து வருகின்ற எதிர்ப்புகளுக்கும் அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி வரும். எனினும் நமது முஸ்லிம் உம்மாவுக்காக எந்த தடைகள் வந்த போதிலும் அவையெல்லாவற்றையும் உடைத்தெறிந்து, நமது நாட்டில் வாழுகின்ற முஸ்லிம்களை மட்டுமல்ல முழு உலகத்திலும் வாழுகின்ற அனைத்து முஸ்லிம்களின் ஒட்டுமொத்த குரலாக "முஸ்லிம் குரல்" ஓங்கி ஒலிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்வதுடன் "முஸ்லிம் குரல்" தங்குதடையின்றி வெளிவர எம்போன்ற பல்லாயிரக் கணக்கான சமூகத் தொண்டர்களின் ஆதரவும், அபிமானமும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்.எல்.எம்.முஸ்தபா, மருதமுனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்வர் இஸ்மாயில் சம்மாந்துறையில் எதிர்நோக்கும் சவால்!



ஐக்கிய தேசியக் கட்சியின் சவாலை அன்வர் இஸ்மாயில் சம்மாந்துறையில் எதிர்கொள்ள வேண்டி வந்துள்ளது. இன்று ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அதிகாரத்தில் சௌகரியமாக அமர்ந்து கொண்டதன் பின், முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல் அரங்கில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கான அரசியல் முன்னெடுப்புக்களை முடுக்கி விடத் தொடங்கிவிட்டது. இச்செயற்பாடானது, மிகக் குறிப்பாக அன்வர் இஸ்மாயிலுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலான பனிப்போராக சம்மாந்துறையில் நிலைகொண்டு ஆடிக்கொண்டிருக்கின்றது. சம்மாந்துறையில் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களே இல்லை என மார் தட்டி நின்ற அன்வர் இஸ்மாயிலின் அரசியல் சவாலை எதிர்கொள்வதற்கு மயோன் முஸ்தபா தலைமையிலான அம்பாறை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள் தயாராகி சம்மாந்துறையிலேயே ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சர்கள் புடைசூழ, ஒரு மக்கள் சந்திப்பை இரு வாரங்களுக்கு முன் நடாத்திவிட்டனர்.

இச்சந்திப்பின்போது அன்வர் இஸ்மாயில் அங்கு பிரசன்னமானதும், பின்பு நடந்ததையும் நாம் அறிவோம்! அம்பாறை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் முன்னெடுப்பு குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸுக்கு பெரும் அரசியல் அச்சுறுத்தலாகவும், அம்பாறை மாவட்டத்தில் அரசியல் அதிகாரம் தொடர்பான கேள்விகளையும் எழுப்பிவிட்டிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களாக உள்ள, அதாவுல்லா, ஹரீஸ், அஸீஸ் போன்றோர் ஐக்கிய தேசிய கட்சியின் இவ் அரசியல் முன்னெடுப்புத் தொடர்பாக கூடதல் மௌனம் சாதிக்க, அன்வர் இஸ்மாயில் மட்டுமே இதற்கு எதிராக வெளிப்படையாகப் போர்க்கொடி தூக்கி உள்ளார். அன்வர் இஸ்மாயிலின் அரசியல் அச்சம் குறித்த உணர்வானது அவரது எதிர்கால அரசியல் குறித்த நலனாக மட்டுமே பார்க்க முடிகிறது.

ஏனெனில் முஸ்லிம்களின் இதுவரையான தனித்துவமான அரசியல் நிலைப்பாட்டினை மறுத்து நிற்கும் ஐக்கிய தேசிய கட்சியுடன் தேர்தல் கூட்டுக்கு போவதையோ அந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டு வருவதையோ கேள்விக்குட்படுத்தாத அவரின் இதுவரையான நிலைப்பாடு, இன்று உள்ளூர் அரசியல் மோதலாக வெடிக்கும் போது கேள்விக்குட்படுத்தப்படுகிறது. இந்த நிலைப்பாட்டினை வைத்தே நாம் மேற்கூறிய முடிவுக்கு வரவேண்டி உள்ளது.

முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் ஐக்கிய



தேசியக் கட்சி பதவிக்கு வந்த தினத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு பாதிக்கப்பட்டு வந்த போதும் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பாக இப்படியான "தலாக்" வரையான வார்த்தையை பிரயோகிக்காதவர் தங்கள் அதிகாரக் கோட்டைக்குள் கால் வைத்தவுடன் போடும் குதியாட்டம் தொடர்பாக நமது மக்களுக்கு நிறையவே இப்போது சந்தேகம் வந்துவிட்டது. அம்பாரை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களை நாம் கடலிலா தூக்கி வீசுவது? அவர்கள் நமது மக்கள் இல்லையா?

தலைவர் டோக்கியோவில் இருக்கிறார். வந்தவுடன் இரண்டில் ஒரு முடிவு காணுவோம்! நாங்கள் நினைத்தால், ஆட்சி அமைப்போம், நினைத்தால் ஆட்சி கவிழ்ப்போம் என அம்பாறையில் மார் தட்டுவதால் நமது மக்களுக்கு என்ன பிரயோசனம்?

மக்கள் உங்களிடம் கேட்கிறார்கள் இப்போது தலைவர் டோக்கியோவில் இருந்து வந்து விட்டார். உங்களுக்கு நடந்த அவமானத்தை அவரால் துடைக்க முடியுமா?




அவர் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு ஒருபோதும் வரமாட்டார். (சொந்த மக்களுக்கே எவ்வளவு பாதிப்பு, அவமானம் நடந்து விட்டது) கடந்த தேர்தலின் போது முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை, மட்டக்களப்பில் ஒரு வகை போஸ்டரும், கண்டி கொழும்பில் இன்னொரு வகை போஸ்டரும் அடித்து மக்களுக்குள் யானைச் சின்னத்தைக் கொண்டு வந்து ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்தியவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் காரர்கள்தானே? அப்படியிருக்க ஏன் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களை புறக்கணித்து அரசியல் நடத்த முற்படுவது? நாம் அவர்களுக்கு முன் மாதிரியாக இருந்து ஏன் அவர்களை நமது தனித்துவமான முஸ்லிம் தேசத்தின் அரசியலின் பால் அரவணைத்து எடுக்க முடியாது?

அன்வர் இஸ்மாயிலுக்கு இப்போது தமிழ் நாட்டின் கருணா நிதியின் நிலைமைதான். டில்லியில் பி.ஜே.பிக்கு ஆதரவு, தமிழ் நாட்டில் பி.ஜே.பியுடன் முரண் அரசியல், இப்போது இரண்டில் ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலையில் கருணாநிதி வசமாக மாட்டிக் கொண்டுள்ளார். அதே போல்தான் நமது தனித்துவ அரசியல் வாதிகளின் நிலையும். இது அன்வர் இஸ்மாயிலுக்கு மட்டுமல்ல, அனைத்து வடக்கு, கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் இதே கதிதான்!

இது தொடர்பாக முடிவு எடுக்க வேண்டியவர் ரவூ.ஃப் ஹக்கீம் மட்டுமே. ஹக்கீம் என்ன முடிவு எடுப்பார் என்பது நமக்குத் தெரிந்ததே. அப்படியிருக்க உணர்ச்சிவசப்பட்டு ஆவேசமாக தலையிருக்க வால் ஆடலாமா?

இந்த நிலையில் அன்வர் இஸ்மாயில் என்ன செய்யப் போகிறார் என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்! நமது அரசியல் அரங்கில் வெடித்தெழும்பி உள்ள இவ் அதிகார மோதல் வெறுமனே மேலோட்டமானது அல்லது ஒரே இரவில் தீர்த்து வைக்கக்கூடியது என்று நம்புவது பெரும் முட்டாள் தனமாகும்.

# கொழும்பு முஸ்லிம்களுக்கும் மீலாத் விழா வேண்டும்!

வாழ்வியலுக்கான இலக்கணத்தை எடுத்துரைத்து, இலக்கியமாக வாழ்ந்து காட்டிய வள்ளலார் நபி (ஸல்) அவர்களின் மீலாத் விழா, நம் நாட்டில் வருடாந்தம் ஒரு தேசிய விழாவாகக் கொண்டாடப்பட்டு வருவதை நாமறிவோம். இவ்விழா அடுத்த ஆண்டு (2004) கொழும்பு நகரில் - கொழும்பு முஸ்லிம்களுக்காக கொண்டாடப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ஆர.பிரேமதாஸாதான், மீலாத் விழாவை ஒரு தேசிய விழாவாகக் கொண்டாடும்படி, முஸ்லிம் சமய கலாசார விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சுக்கு பணிப்புரை வழங்கினார். அந்தப் பணிப்புரையைத்தான் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்களுக்கு இராஜாங்க அமைச்சராக இருந்த அஸ்வர் அவர்கள் அழகாகப் பயன்படுத்தி, புத்தளம் - மாவனெல்ல - அநுராதபுரம் - மாத்தளை ஆகிய நான்கு ஊர்களிலும் "ஓர் அரசு விழா"வாக நடத்தி சாதனை படைத்தார்.

தேசிய மீலாத்விழாக்களில் சமய சார்பான போட்டிகள் பாடசாலை மாணவர்களிடையேயும், இளைஞர்களிடையேயும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. விழா நடைபெறும் ஊர்களில் முக்கியமான அபிவிருத்திப் பணிகள் நிறைவேறின. அவ்வூர் இறையில்லங்களின் குறைகள் நீக்கப்பட்டன. விழா, நடைபெறும் முஸ்லிம் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கான பயன்தரு உதவிகள் செய்யப்பட்டன. இவை அனைத்திற்கும் உச்சமாக, தேசிய மீலாத் விழா இடம்பெறும் மாவட்டத்து முஸ்லிம்களின் வரலாறு எழுதப்பட்டு, அரசாங்க செலவில் ஒருவரலாற்று நூல் வெளியிடப்பட்டது. இவ்வரலாற்று நூலாக்க முயற்சி, "இந்நாட்டு முஸ்லிம்களுக்கென ஒரு வரலாறு இல்லை யே" எனக் கூறப்பட்டு வந்த கோஷத்தை குரல் மங்கச் செய்தது எனலாம்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசமைத்தபின், இதே தேசிய மீலாத் விழா, கம்பஹா மாவட்டம், கண்டி - கம்பளை ஆகிய ஊர்கள், அம்பாறை மாவட்டம் போன்ற இடங்களில் கொண்டாடப்பட்டுள்ளன. மீண்டும் ஆட்சி மாற்றம் உண்டாகி, ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி பீடம் ஏறிய பின், முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் அல்ஹாஜ் ரவூ.ஃப் ஹக்கீம், மடவளை உடதலவின்ன ஆகிய இரு ஊர்களிலும் கொண்டாடியதோடு,




இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் மீலாத் விழாவை ஏறாவூரில் கொண்டாட பணிப்புரை வழங்கி, ஏற்பாடுகள் உற்சாகமாக நடைபெற்று வருகின்றன. இவ்விழாவுக்கென ஐந்து கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக "முல்லா" பத்திரிகை செய்தி மூலம் அறிய வந்துள்ளேன்.

இத்தகைய சிறப்பு மிக்க - பல்வேறு நன்மைகளை தரவல்ல இத்தேசிய மீலாத் விழாதான், ஏறாவூருக்கு அடுத்ததாக- அடுத்த ஆண்டு (2004 இல்) கொழும்பு முஸ்லிம்களுக்காக - கொழும்பிலே கொண்டாடப்பட வேண்டும் என, அமைச்சர் ரவூ.ஃப் ஹக்கீமுக்கு "முல்லா"வினால் கோரிக்கையாக விடப்படுகிறது. அதற்கான நியாயமான காரணிகள் இதோ....

சன்மார்க்க நெஞ்சங்களே!

கொழும்பு முஸ்லிம்கள் "ஜிகினா தார்பார்" வாழ்வுக்குப் பழக்கப்பட்டவர்கள். இதனால் கொழும்பு முஸ்லிம்கள் ஏதோ நன்னிலையில் - தரத்தோடு வாழ்கிறார்கள் என எண்ணினால், அது நிச்சயம் தப்புக் கணக்காகவேயிருக் கும் என்பதை அறுதியிட்டு உறுதியாகச் சொல்லலாம். கொழும்பில் முஸ்லிம்கள் செறிந்து வாழக்கூடிய கொம்பனித்தெரு - வாழைத்தோட்டம் - புதுக்கடை - மாளிகாவத்தை முதலிய பகுதிகளில் - தோட்டங்களில் உள்நுழைந்து பார்த்தால், அன்னவர்களின் உண்மையான நிலை புரியும். ஏனைய ஊர் முஸ்லிம்களோடு இவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால், கொழும்பு முஸ்லிம்கள் பலவழிகளிலும் பின்னடைவு கண்டேயிருப்பது கண்கூடாக விளங்கிவிடும்.

கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் ஆவணப் பதிவு ஏடுகளைப் புரட்டினால், இவர்களின் கல்வி வீழ்ச்சி புள்ளி விபரங்களோடு வெளிச்சமாகி விடும். இந்த கொழும்பு முஸ்லிம்களை அவர்களது வருங்கால வாரிசுகளை யாவது கொஞ்சம் கைதூக்கி விடும் காரியத்தை எவராவது செய்யத் துணிந்தால், அவர்களை கல்வித்துறையில் முன்னேற வழி செய்தால் அதுவே போதுமானது.

கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளை சற்றே வலம் வந்து, ஒரு சுற்று நோட்டமிட்டுப் பாருங்கள். ஒரு பாடசாலையாவது "ஒப்பேறும்" நிலையில் இல்லை என்பதை உணர முடியும். கல்வி வளங்கள் நிறைந்த மாவட்டம் என்று, கொழும்பை கல்வி வட்டாரம் கணித்து வைத்திருக்கிறது. என்ற போதும், கொழும்பூர் முஸ்லிம் பாடசாலைகளில் எதுவும் இன்னுமே முன்னேறியதாகத் தெரியவில்லை. இந்நிலை தொடருமேயானால் தலைநகரத்து முஸ்லிம் சமூகத்தின் பிரதான பகுதி பாதிக்கப்பட்டு விடும் நிலை விரைந்து வருவதை எவரும் தடுக்க முடியாது போய்விடும்.

எனவே, உடனடியாக கொழும்பு முஸ்லிம்களின் கல்விக் கூடங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, கல்வி வளங்கள் உரிய வழிகளில் பயன்படுத்தப்பட்டு, கொழும்பு முஸ்லிம் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளை எடுக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும். மர்ஹூம்களான சேர் ராஸிக் பரீத், பதியுத்தீன் மஹ்மூத் போன்றோரின் கல்விச் சேவைக்குப் பிறகும், எந்த முஸ்லிம் தலைவரும், கொழும்பு எம்.பி.மாரும் கொழும்பு முஸ்லிம்களின் கல்வி விவகாரத்தில் ஆரோக்கியமான கோணத்தில் முறைப்படி கவனத்தை திருப்பவில்லை என்பதுதான் நூறு சதவீத உண்மை.

தேசிய மீலாத் விழாவின் சிறப்புக்காக, அரசினால் கோடி கோடியாகப் பணம் ஒதுக்கப்படுவதை தெரிந்தே வைத்திருக்கிறோம். கொழும்பு நகரம் ஒரு வளர்முக நாட்டின் தலைநகர் என்பதாலும், வளர்ந்து வரும் விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப காய் நகர்த்தும் சூழலுக்கேற்ப தலைநகர் அபிவிருத்தி செய்யப்படுகிறது; செய்யப்படும் என்பதால், மீலாத் விழாவுக்கான நிதி ஒதுக்கீட்டினால், நகர அபிவிருத்தி எதுவும் செய்யப்படாமல், முழுக்க முழுக்க கொழும்பு முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காகவே அது செலவிடப்பட வேண்டும்.

மற்றது - கொழும்பு முஸ்லிம்களின் வரலாறு இதுவரை எழுதப்படவில்லை. கொழும்பூர் முஸ்லிம்களின் வரலாறு ஆவணப்படுத்தும் நோக்கில், அது நூலுருப் பெற்றால் இன்றைய நாட்டுச் சூழலில் அது வருங்காலத்தில், சமுதாயத் தலைவாசலில் தொங்கவிடப்பட்ட ஆவணப் பட்டயமாகத் திகழும் என்பதில் எண்ணளவும் ஐயமில்லை. இலங்கை முஸ்லிம் சமுகத்தின் வரலாற்றுப் பாரம்பரியத்தில், கொழும்பு முஸ்லிம்களின் வரலாறு மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

அதனால், கொழும்பு முஸ்லிம்களின் கல்வி நலன் - வரலாறு நூலுருவாக்கம் ஆகிய இரு காரணங்களின் தேவைகளுக்கு, தேசிய மீலாத்தின் பெயரால் உருப்படியான பணிகளை செய்ய வேண்டும் என்பது சமுதாயத்தின் குரலாகும். நகர அபிவிருத்தி, வீடமைப்பு போன்றன அரசின் பொதுப் பார்வையில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு. கல்வி - வரலாறு ஆகிய இரு அம்சங்களும் கொழும்பு முஸ்லிம்களின் அவசிய, அவசரத் தேவை. இதற்காகவேனும் தேசிய மீலாத் விழாவை அடுத்த முறை கொழும்பில் நடத்த வழி செய்ய வேண்டும். அரசியலுக்கு அப்பால், சமுதாய நலன் கருதி, இவ்விடயம் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும்.

# முஸ்லிம் அரசியல் தலைமைகள் தூங்கிக் கொண்டிருந்தால் முஸ்லிம் மக்கள் விழித்துக் கொள்வார்கள்!

றாஸி முஹம்மத் இப்னு ஜாபீர் - அக்கரைப்பற்று

இஸ்லாமியர்கள் எனும் போது தீவிரவாதிகள் எனப் பச்சை குத்தும் மேற்கத்தைய நாடுகளின் ஆதிக்கத்துக்குள்ளும், வக்கிரத்துக்குள்ளும் அடைபட்டுக் கொண்ட சமுதாயமாகத்தான் நாம் அன்றிலிருந்து இன்று வரைக்கும் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றோம். எமது உரிமைகளும் எமது சுதந்திரங்களும் அந்நியர்களின் அதிகார வெறிக்குள் சிக்கித்தவிக்கும் துரும்பாகவே போய்விட்டது. வல்ல அல்லாஹ்வையும், றஸூலையும் ஏற்றுக் கொண்ட ஒரே ஒரு காரணத்தினால் நமது மதத்திற்கு அரசியல் முலாம் பூசப்பட்டு நசுக்கப்படும் ஒரு சமுதாயமாகவே நாம் இருந்து வருகின்றோம்.

இலங்கையில் வாழ்ந்து வரும் சிறுபான்மை மக்களான முஸ்லிம்களின் நிலை எப்படி இருந்தது? எப்படி இருக்கின்றது? என்கின்ற ஆராய்ச்சியில் சுதந்திரத் துக்கு முன்னர் முஸ்லிம்களின் நிலை தொட்டு இன்றுவரை கவனித்துக் கொண்டு வந்தால் ஓர் ஒதுக்கப்பட்ட இனமாகவும், ஒரு பெரும்பான்மைக் கட்சி ஆட்சியமைப்பதற்கு மாத்திரம் கைகுலுக்கி அணுகப்படும் இனமாக வுமே இருந்து வந்திருகின்றது என்பது கண்கூடு.

வரலாற்றில் நட்டாற்றில் விடப்பட்ட ஒரு சமுதாயமாக முஸ்லிம்கள் சின்னாபின்னப்படுத்தப்பட்ட போதுதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம் ஒரு தைரியத்தை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்துக்குப் பிறகு முஸ்லிம்கள் நம்பிக்கைப் பெருமூச்சு விட்டனர்.

முஸ்லிம் காங்கிரஸ் இந்நாட்டின் அரசியலையும், அரசாங்கத்தையும் தீர்மானிக்கும் மாபெரும் சக்தியாக உயர்ந்ததை நாம் அங்கீகரிக்க வேண்டும். தன்னிடமிருக்கும் ஆசனங்களைக் காட்டிப் பேரம் பேசும் வலிமையினை மு.கா. பெற்றுக் கொண்டது. இந்தப் பேரம் போக்குத்தான் பெரும்பான்மை வாதிகளின் ஆட்சியமைப்புக்குத் தேவைப்பட்டது. இதனால் முஸ்லிம்கள் மீது சில விட்டுக் கொடுப்புக்களை கொடுக்க முன்வந்தார்களே ஒழிய அவர்களுக்கு முஸ்லிம் இனம் மீது எந்தத் தனிப்பட்ட அக்கறையும் கிடையாது. இலங்கை வாழ் முஸ்லிம்கள் மு.கா வின் தோற்றத்துக்குப் பின்னர் சற்று தலையை நிமிர்த்திக் கொண்டு வாழ்ந்தார்கள் என்றால் அதற்கான காரணம் மு.கா.விடம் இருந்த பேரம் பேசும் திறன்தான்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் அமைச்சர் அஷ்ர.ஃப்பின் மரணம், மு.கா.விற்குள் அதிகாரப் போட்டியினை ஏற்படுத்திக் கொடுத்தது. தலைமைத்துவத்திற்கான போராட்டத்தில் ஃ பேரியலும், ரவூ.ஃப் ஹக்கீமும் மோதிக் கொண்ட வெப்பத்தில், குளிர்காய்ந்தவர்கள் அரசியல்வாதிகளே. நுஆ, மு.காவிலிருந்து பிரிந்த போது இந்தப் பேரம் பேசும் தன்மை சற்றுக் குறைந்தது என்றாலும், முஸ்லிம்களின் தலைசாய்ந்து விடவில்லை. ஓரளவு ஸ்திரமாகத்தான் நின்றார்கள். அமைச்சர் பதவியிலிருந்து ரவூ.ஃப் ஹக்கீம் விலக்கப்பட்ட போது ஆட்சி கலைந்ததும், முஸ்லிம்களுக்கு இன்னும் பேரம் பேசும் திறன் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தியது.

2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மு.காவுக்கு பல அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கியது. சமாதானத்துக்கான வாசல்கள் திறக்கப்பட்டன. ஹக்கீம் - பிரபா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இருதரப்பினாலும் சமரசம் செய்து கொண்டு எடுக்கப்பட்ட முடிவுகள் இதுவரைக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்றால், இல்லை என்பதே உண்மையாகும்.

இப்படியான சந்தர்ப்பத்தில்தான் அமைச்சர் அதாவுல்லாவுக்கும், ரவூ.ஃப் ஹக்கீமுக்கும் இடையில் முரண்பாடுகள் ஆரம்பித்தன. இப்படியான மறைமுகமான புகைச்சல்கள் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமை விடயத்தில் "தீக்கங்குகளாக" உருவெடுத்தது. இப்போது அது அஷ்ர.ஃப் காங்கிரஸ் எனும் சமூகசேவை இயக்கத்தில் (?) வந்து நிற்கின்றது என்பது எல்லோரும் அறிந்ததே.

இந்த நிலைமையில் இவர்கள் இருவரில் யார் பிழை? யார் சரி என்பதல்ல எமது வாதம். இவர்களது செயற்பாட்டால் இலங்கை வாழ் முஸ்லிம்களின் நிலை எத்தனை தூரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதே பிரச்சினை. ஆனால், ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிப் பேசுவதற்கு இது சரியான சந்தர்ப்பம் அல்ல என ரவூ.ஃப் ஹக்கீம் ஏற்றுக் கொண்டுதான் இருக்கின்றார். இத்தனை தூரம் அல்லோல கல்லோலப்பட்டு வந்த முஸ்லிம்களுக்கு இது சரியான சந்தர்ப்பம் இல்லை என்றால் எதுதான் சரியான சந்தர்ப்பம்? இன்னொரு தீவிரவாதம் உருவான பின்னரா அந்த சரியான சந்தர்ப்பம் வரும் என்பதை ஹக்கீம் விளக்கத்தான் வேண்டும். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் "அஷ்ர.ஃப் காங்கிரஸ்" என்று சொல்லிக் கொண்டு அமைச்சர் அதாவுல்லாஹ் அணியினர் ஒரு புதுக்குழுவினை உருவாக்கியிருப்பது சரிதானா? எனக் கேட்கத் தோன்றுகின்றது.

இவ்வேளையில் வட-கிழக்கு மாகாணம் ஒரு உள்ளூராட்சித் தேர்தலை சந்திக்க நேரிட்டால், "இது அரசியல் கட்சி அல்ல சமூக சேவை இயக்கமே" எனச் சொல்லும் அஷ்ர.ஃப் காங்கிரஸ்காரர்கள் அத்தேர்தல் காலத்திலும், சமூக சேவை இயக்கங்களாகத்தான் இருப்பார்களா என்பதும் ஒரு கேள்விக்கிடமான விடயம். அவ்வாறு அவர்கள் இருந்தாலும், நேரடியாக போட்டியிடாவிட்டாலும் கூட, மறைமுகமான அரசியல் ஆதரவினை மு.கா. வுக்கு எதிராகத் தேடிக் கொள்வதற்கும், ஏன் காலப் போக்கில் அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இப்படியானதொரு சூழ்நிலையில் ஒரு பொதுத்தேர்தலை இந்நாடு எதிர்நோக்கும் போது முஸ்லிம்களின் நிலை என்னவாக இருக்கும் என்பதே எம்முன்னுள்ள கேள்வி. இச்சூழ்நிலையில் முஸ்லிம்களின் பேரம் பேசும் திறன் இருக்குமா என்று கேட்டால் இல்லை என்று அடித்துச் சொல்லக் கூடிய சந்தர்ப்பம் ஒன்று உருவாகலாம். அதாவுல்லாஹ் அணியினர் காலப் போக்கில் ரவூ.ஃப் ஹக்கீமை ஆதரிப்பர் என்று சொல்லிவிட முடியாது. இதனால் அதாவுல்லாஹ் அணியை ஆதரிப்பவர்களின் வாக்குகள் பல்வேறு மாவட்டங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மொத்த வாக்குகளில் இருந்து பிரியப் போகின்றது என்பது உறுதி. அதனால் ஆசனங்கள் குறைவடைவதற்கான வாய்ப்புகள் உண்டு. அப்போது முஸ்லிம் களின் பேரம் பேசும் சக்தி பறந்து போகும்.

இப்படியான சூழ்நிலையில் முஸ்லிம்களின், பேச்சுவார்த்தை மேசை எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க முடியாத நிலை ஏற்படும். எனினும் கூட ஒரே ஒரு விடயத்தை முஸ்லிம் வாலிபர்கள் முதல் முதியவர்கள் வரை பரிபூரணமாக நம்ப வேண்டியிருக்கின்றது. அதுதான் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல்வாதிகளை நம்பி, முஸ்லிம் மக்களுக்கு பேச்சுவார்த்தை மேசையில் ஒரு தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதைப் போல் அறிவீனமானது எதுவும் கிடையாது எனச் சொல்ல முடியும். ஏனெனில் தங்கள், தங்கள் கதிரைகளைச் சூடாக்கிக் கொள்வதிலும், தங்களுடைய தனிப்பட்ட அரசியல் எதிர்காலத்தை தக்கவைத்துக் கொள்வதிலுமே இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் கரிசனை காட்டுகிறார்களே ஒழிய, முஸ்லிம் மக்களின் நலன் மீது அல்ல என்பது அவர்களின் பிற்போக்குத்தனமான அண்மைக் கால செயற்பாடுகள் மீண்டும் ஊர்ஜிதம் செய்திருக்கின்றன. இந்த அரசியல் வாதிகளை நம்பிக் கொண்டு "என்ன நடந்தாலும் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்" என்று இந்த மக்கள் நினைத்து விட்டு, கண்ணைத் திறந்து பார்த்தார்களானால் முஸ்லிம் மக்களின் அலறலுக்கும், இரத்தத்துக்குமிடையில் நங்கூரமிட்டு இந்த அரசியல் வாதிகள் அதிகார கதிரைகளில் கால்களைப் பிடித்துக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். ஆகவேதான் இந்த அரசியல்வாதிகளை நம்பி எமது உரிமைகளை நாம் ஏலம் போட்டுவிட முடியாது.

இப்படியானதொரு சந்தர்ப்ப சூழ்நிலையில் முஸ்லிம் தேசத்தின் எதிர்காலமும் அரசியல்வாதிகளின் அதிகாரமும் போட்டி போட்டுக் கொள்ளும் போது முஸ்லிம் இளைஞர்களின் நிலை என்ன என்பதை இந்த நாடு தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு ஒரு ஆதாரச்சான்றுதான் முஸ்லிம் தேசப்பிரகடனம். எந்த சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் சமுதாயம் அடிமைப்பட்டுத்தான் வாழவேண்டும் என்று எந்த அரசாங்கமும் நினைத்தால் அது முடியாத காரியம். உலகில் எந்தப் பாகத்திலும் முஸ்லிம்கள் அழிக்கப்பட்டாலும், நசுக்கப்பட்டாலும் தங்கள் உரிமைக்காகப் போராடி இறுதி மூச்சுவரைக்கும் இரத்தம் சிந்தி ஷஹீத் ஆவார்களே தவிர அடிமைப்படவே மாட்டார்கள். அப்படியான சந்ததியில் இருந்து வந்தவர்கள் நாங்கள். உமரினதும், அலியினதும் வாரிசுகள் இன்னும் ஆயிரம் உயிர்களையும், ஆயிரம் அலிகளையும் எம்மால் உருவாக்கிவிட முடியும். தமிழர்களின் உரிமைகள் நசுக்கப்பட்டதற்காக எவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் உருவானார்களோ அந்த நிலை முஸ்லிம்களுக்கு வந்து விடக் கூடாது என்பதில் எல்லோரும் கவனமாக இருக்கின்றார்கள். அதற்காக கல்லுக்குக் கீழ் வாழும் தேரைகளாக நாம் இருக்கமாட்டோம். இன்றைய முஸ்லிம் தலைமைத்துவங்களை நம்பவே கூடாது என்பது எமது வாலிபர்களுக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. இந்த முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்காலத்தை குழி தோண்டிப் புதைத்து விட்டு முஸ்லிம் தலைமைத்துவங்கள் தங்கள் சமாதியில் நிம்மதியாக உறங்கும் போதும் [illegible] அரசியல்வாதிகளுக்கு ஒவ்வொரு தாயின் கண்ணீரும் சாபமாய் போய்விடும்!

இந்த அரசாங்கம் இன்னொரு பலஸ்தீனையும், இன்னொரு செச்னியாவையும் இலங்கையில் உருவாக்கிப் பார்க்க விரும்பினால் அதற்கு முஸ்லிம்கள் தடையாக இருக்க மாட்டார்கள். *கண்களில் கனவுகளைச் சுமந்து கொண்டு வாழ்வின் சுகானுபவ விழிம்புகளுக்குள் எட்டிப் பார்க்க விரும்பும் இளைஞர்கள் முஸ்லிம் சமுதாயத்தின் மீட்சிக்காய் போராட வேண்டும் என இந்த அரசாங்கம் விரும்பினால் அதற்கும் தடையில்லை.* சமாதான மேடையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு என்ன என்னவெல்லாம் கொடுக்கப்படுகின்றதோ அவை அனைத்தும் பாரபட்சமின்றி முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால், முஜாஹிதீன்கள் உருவாக்கப்படமாட்டார்கள் தானாகவே உருவாகுவார்கள்.

ஒரு இஸ்லாமிய சுதந்திரப் போராட்டத்தின் பின்னர்தான் முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமைபற்றி சிந்திக்க முடியும் என இன்றைய அரசியல்வாதிகள் நினைத்தால் ஓர் இஸ்லாமிய விடுதலை இயக்கம் உருவாவதற்கு அதிக நாளாகா என்பதை இந்த நாடு நினைவில் வைத்துக் கொள்ளட்டும். அந்தப் போராட்டம் ஜிஹாத் அல்லிஸான் என்னும் நாவு ரீதியான போராட்டமாகவும் இருக்கலாம் அல்லது ஜிஹாத் அஸ்ஸியாஸி என்னும் அரசியல் ரீதியான போராட்டமாகவும் இருக்கலாம். அதுவும் முடியாவிட்டால் ஜிஹாத் பில்பதன எனும் உடல் ரீதியான ஆயுதப் போராட்டமாகவும் இருக்கலாம்.

எனவேதான், இவை எல்லாவற்றையும் சிந்தித்து, தங்கள் பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அரசியல்வாதிகள் செய்யும் கீழ்த்தரமான நிலையைக் கைவிட்டு, நமது மக்களின் நன்மைக்காக செயற்பட முஸ்லிம் அரசியல் தலைமைகள் இனியாவது முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்க சக்திகளின் சந்தர்ப்பவாத யுத்தக்கொள்கைகளும் முரண் தன்மைகளும்

நியாயமற்ற யுத்தம் வெறுக்கத்தக்கது. அது என்றென்றைக்கும் நமக்கு வேண்டாம். இந்த நிலைப்பாட்டில் யுத்தம் தொடர்பாக மக்கள் ஒரு முரணற்ற கொள்கையைத்தான் எப்போதும் கடைப்பிடித்து வருகின்றார்கள். இலங்கையில் வாழும் மக்கள் என்றால் என்ன, உலகெங்கிலும் பரந்துகிடக்கும் கோடிக்கணக்கான மக்கள் என்றால் என்ன இதுதான் பொதுக் கொள்கையாக உள்ளது. இதற்கு அநியாயமான யுத்தங்களுக்கு எதிரான மக்களின் போராட்டக் களங்கள் பல சாட்சி பகர்கின்றன.

அதேசமயம், மக்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதன் மூலமாக தமது பொருளாதார, அரசியல் நலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆதிக்க சக்திகளைப் பொறுத்தவரையில், நியாயமற்ற யுத்தம் குறித்து முன்னுக்குப்பின் முரணான மிகவும் சந்தர்ப்பவாத நிலைப்பாட்டினை கடைப்பிடிக்கின்றனர்.

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக சிங்கள ஆதிக்க சக்திகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறை யுத்தம், ஈராக்கிற்கு எதிராக இருபெரும் ஏகாதிபத்திய அரசுகள் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தம் ஆகிய இரண்டு யுத்தங்கள் தொடர்பாகவும் இலங்கை மக்களை தமது ஆதிக்கத்திற்குள் வைத்திருக்க விரும்பும் சிங்கள ஆதிக்க சக்தியின் இருபெரும் அணிகளான ஐக்கிய தேசியக்கட்சியும் அதன் அணிகளும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் அதன் அணிகளும் கடைப்பிடித்துவரும் நிலைப்பாடுகள் முன்னுக்குப்பின் முரணான தன்மையை வெளிப்படையாகக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தை எப்படியோ முடிவிற்குக் கொண்டுவரவேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்வைத்து வரும் ஐ.தே.கட்சி அணியானது ஈராக் மக்களை கொன்றுகுவிக்கும் அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அணியின் அப்பட்டமான ஆக்கிரமிப்பு யுத்தத்தை வெளிப்படையாக ஆதரித்து நிற்கின்றது. அதே சமயம் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை கடுமையாக கண்டித்து நிலைப்பாடு மேற்கொண்டிருக்கும் ஸ்ரீ.சு.கட்சியும் அதன் அணிகளும் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வருவதை எதிர்த்து வெளிப்படையாகவே செயற்பட்டு வருகின்றன.

இவ்விரு தரப்பின் முரண்நிலைக்கும் அடிப்படையான காரணம் யுத்தம் குறித்து தெளிவான, நிலையான ஒரு கொள்கை இவர்களிடம் இல்லை என்பதாகும். மக்கள் நலனில் இருந்து பிறக்கின்றதும், நிலையானதும், முரணற்றதுமான ஒரு கொள்கை, யுத்தம் குறித்து இவர்களிடம் கிடையவே கிடையாது. மாறாக தமது அரசியல் பொருளாதார நலன்களை இலக்குகளையே இவர்களின் யுத்தக் கொள்கைகள் பிரதிபலிக்கின்றன.

அந்த வகையில் ஒரு கேள்வி எழுகின்றது. ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தை ஏதோ விதத்தில் ஆதரிக்கும் ஐ.தே.கட்சி உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவரும் விடயத்தில் எப்படி நேர்மையாகச் செயற்பட முடியும்.



அதேபோல உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வருவதை எதிர்த்து நிற்கும் ஸ்ரீ.சு.கட்சி அணியானது ஈராக்கின்மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டிலும் நேர்மைத்தன்மையுடன் எவ்வாறு இருக்க முடியும். இது ஜே. வி. பி. யிற்கும் பொருந்தும். ஆக. இவ்விரு தரப்பிலுமான யுத்தம் குறித்த அப்பட்டமான சந்தர்ப்பவாதக்கொள்கைகள் தெள்ளத்தெளிவாகின்றன.

இது சிங்கள ஆதிக்கத்தரப்பினரின் நிலை என்றால் சிங்களத்தரப்பினரின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடி வருவதாக கூறிக்கொள்ளும் தமிழ் அரசியல் தலைமைகள், முஸ்லிம் அரசியல் தலைமைகள் என்பன யுத்தம்குறித்து எத்தகைய நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன என்று பார்த்தால் அங்கும் மேற்கூறியதற்கொப்பான முரண் தன்மையைக்காண முடிகின்றது.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆதரித்து வெளியிலும் உள்ளும் செயற்படும் ஐ.தே.கட்சி அணியில் இருக்கும் முஸ்லிம் காங்கிரஸார், மேற்படி ஆக்கிரமிப்பு யுத்தத்தை கடுமையாக எதிர்ப்பதாகக் காட்டிக்கொள்கின்றார்கள். ஆனால் மேற்படி யுத்தத்தை ஆதரிக்கும் பச்சைக்கட்சி அரசாங்கத்துடன் இது தொடர்பான நிலைப்பாட்டு விடயத்தில் எதுவித சிறு உரசலுமின்றி காணப்படுகின்றனர். ஈராக் மக்கள் தொடர்பாக மட்டுமல்ல, இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாகவும் இதுவே இவர்களின் தனி வழி. எந்த வித சிறு அழுத்தத்தையும் அரசாங்கத்திற்கு இவர்கள் கொடுக்கவில்லை.

அதே சமயம் ஈராக் மக்களை விடுவிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு ஆக்கிரமிப்பு யுத்தத்தை மேற்கொண்டுவரும் அமெரிக்கப் பிரித்தானிய ஏகாதிபத்திய அரசுகளின் யுத்தக்கொள்கையை ஆதரிக்கும் நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள், அன்டன் பாலசிங்கம் ஊடாக வெளியிட்டுள்ளனர். இதே அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் தேசிய விடுதலைப்போராட்டம் நடாத்திவரும் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என ஏலவே முத்திரையிட்டு தடைசெய்துள்ளன. மாத்திரமன்றி பல மேற்குநாட்டு அரசுகளையும் இவ்வாறு செய்யுமாறு தூண்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழ் மக்களுக்கு எதிராக பொது சன முன்னணி அரசு கடந்த வருடங்களில் நடாத்திய காட்டு மிராண்டித்தனமான யுத்தத்திற்கும் சூட்டப்பட்ட பெயர் "தமிழ் மக்களை விடுவிக்கும் யுத்தம்" என்பதையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்வோம்.

அந்த வகையில் ஏகாதிபத்திய அரசுகளின் கொள்கைகளினாலும், சிங்கள ஆதிக்க சக்தியின் கொள்கையினாலும் நீண்டகாலமாக அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் தலைமைகளும்கூட அநியாயமான யுத்தங்கள் விடயத்தில் முரணான, சந்தர்ப்பவாதமான கொள்கை நிலைப்பாடுகளையே கொண்டிருக்கின்றன என்பதே மிகவும் விசனத்திற்குரியதாக உள்ளது. இச்சந்தர்ப்பவாதப்போக்கு அமைதியையும் சமாதானத்தையும் உண்மையாகவே நேசிக்கும் மக்களையும் ஜனநாயக சக்திகளையும் கடுமையாக அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

# நீங்களும் படிக்கலாம் சில குறிப்புகள்...

## பாழாகும் பழங்கள்

இறக்குமதி செய்யப்படும் பழங்களில் நஞ்சு இரசாயனங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சி, உடலுக்கோ விஷம். அழகான வர்ணங்களில் இறக்குமதி செய்யப்படும் பழங்களைப் பற்றி சொல்ல வேண்டுமானால் இப்போதைக்கு இப்படித்தான் சொல்ல வேண்டும். இறக்குமதி செய்யப்படும் பழங்கள், பார்க்க செழிப்பாகவும், அழகாகவும் இருந்தாலும் அவற்றில் உள்ள ஆபத்துக்களை எடுத்து விளக்க எந்தவித லேபலும் இல்லை. இறக்குமதி செய்யப்படுவதற்காக அவற்றை தயார் நிலையில் வைப்பதற்கென சேர்க்கப்படும் இரசாயன பதார்த்தங்களை நீங்கள் உங்களை அறியாமலேயே இந்தப் பழங்களோடு சேர்த்து உண்டு வருகிறீர்கள்.

சிறிதும் "களங்கமில்லாத" காய்கறிகளும் பழங்களும் உங்களுக்குக் கிடைப்பதற்குக் காரணம் அவற்றின் தயாரிப்பின் ஒவ்வொரு நிலையிலும் சேர்க்கப்படும் பூச்சிக் கொல்லிகள் தான் என்பதை நீங்கள் அறிவீர்களா?




உதாரணமாக வெங்காயத்தையும் உருளைக் கிழங்கையும் அதிக நாட்கள் வைத்திருக்க வேண்டும் என்றால் அவை முளை விடாமல் இருக்க வேண்டும். அப்படி முளை விடாமல் இருப்பதற்கென அதற்கான மருந்துகளை சேர்க்க வேண்டும்.

பழங்களையோ அதிக நாட்களுக்கு வைத்திருக்க முடியாது. ஆனால் அவை இறக்குமதி செய்யப்படுவதோ அதிக அளவில். அதனால் பழங்கள் வீணாகாமல் இருப்பதற்கு இன்னும் நல்ல "சிகிச்சை" வழங்க வேண்டும்.

அதோடு இந்தப் பழங்கள் மக்களைச் சென்றடையும் வரையில் படிப்படியாக ஒரு வியாபாரியிடமிருந்து இன்னொரு வியாபாரிக்கு கைமாறும் காரணத்தால் ஒரே பழம் பலமுறை பூச்சிக்கொல்லி தெளிப்புக்கு உள்ளாக நேரிடும். இந்த நிலையில் பூச்சிக் கொல்லி, பழங்களிலேயே தங்கிவிடும் ஆபத்து இருக்கிறது.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காய்கறி மற்றும் பழங்களில் 50 சதவீதம் அப்பிள், 33 சதவீதம் பேர் பழம், 76 சதவீதம் உருளைக் கிழங்கு ஆகியவற்றில் தெளிக்கப்பட்ட மருந்துத் துளிகளின் மிச்சங்கள் ஒட்டிக் கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூச்சிக்கொல்லி தெளிக்கப்படுவதற்கான விதிமுறைகளை மீறாமல் சரியான முறையில் பூச்சிக் கொல்லிகள் தெளிக்கப்பட்ட காய்கறிகளிலும் அதன் மிச்சங்கள் ஒட்டிக் கொண்டு தான் இருந்தன.

இவ்வாறு சிகிச்சை அளிக்கப்பட்ட அப்பிள்கள் 8 லிருந்து 16 வாரங்களுக்குத் தாக்குப்பிடிக்கின்றன. உருளைக்கிழங்கு மற்றும் பேரிப் பழமும் 4 மாதங்களுக்கு பூச்சிக்கொல்லியால் தாக்குப் பிடிக்கின்றன. தோடம், திராட்சை, கிவி பழங்கள் 4 லிருந்து 8 வாரங்களுக்குத் தாக்குப் பிடிக்கின்றன. வாழைப்பழம், விளாம்பழம் மற்றும் மாங்காய்கள் 2 லிருந்து 4 வார ங்களுக்குத் தாக்குப் பிடிக்கின்றன.

இவ்வாறு நாம் உண்ணுவதற்காக பாதுகாத்து வைக்கப்படும் பழங்களில் பூச்சிக்கொல்லி, பாசிக்கொல்லி, எலி கொல்லிகள் போன்றவற்றைப் போட்டு பிறகு நமக்கு "பாதுகாப்பாக" கொடுக்கிறார்கள்.

பழங்கள் மற்றும் காய்கறிகள் வளரும் பருவத்தில் இருக்கும் பொழுது அவற்றின் மேல் தெளிக்கப்படும் பூச்சிக் கொல்லிகள் மழை, காற்று மற்றும் அறுத்துக் கழுவும் பொழுது சிறிதாவது அகற்றப்பட்டுவிடுகிறது. ஆனால் பேக், பெட்டியில் அடைக்கும் பொழுது சேர்க்கப்படும் பூச்சிக் கொல்லிகளை அகற்றுவதற்கு வழிகளே கிடையாது.

பழத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும் பூச்சிக்கொல்லிகள் அதைச் சாப்பிடும் நமக்கு தீங்கை ஏற்படுத்திவிடுகின்றன.

# வறுமையின் காரணங்கள்

- ஐவேளைத் தொழுகையையும் தொழாமல் இருப்பது.
- விரிப்பு (சுப்றா) விரிக்காமல் சாப்பிடுவது.
- தொழுகையில்லாதவரின் பார்வை தொழுகையாளியின் வீட்டில் படுவது.
- குளியலறையில் சிறுநீர் கழிப்பது.
- உடைந்த சீப்பினால் தலை சீவுவது.
- வீட்டில் சேரும் குப்பைகளைக் கூட்டி மூலையில் வைப்பது
- உடைந்த பாத்திரங்களை உபயோகிப்பது
- இடது பக்கத்தை உபயோகித்து ஆடை, செருப்பு அணிதல்
- மஃரிப்புக்கும் இஷாவுக்கும் இடையில் உறங்குவது.
- உறவினர்களை மரியாதை குறைவாக நடத்துவது.
- விருந்தினர் வருகையால் வெறுப்படைவது. வருமானத்தைவிட அதிகம் செலவு செய்வது.
- பெரிய பாத்திரங்களில் வாய்வைத்து குடிப்பது
- பல்லினால் நகத்தை கடிப்பது
- ரொட்டியை பல்லினால் கடித்து சாப்பிடுவது.
- மறைவான இடத்திலுள்ள முடிகளை நாற்பது நாட்களுக்கு மேலாக சுத்தம் செய்யாமல் இருப்பது.
- இறந்தவர்களின் முடிகளை அகற்றுவது
- கிழிந்த ஆடைகளை அணிந்து கொண்டே தைப்பது
- பெண்கள் நின்று கொண்டே தலை சீவுவது.
- குடிக்கும் நீரை இரவு நேரங்களில் திறந்து வைப்பது.
- தன் குழந்தைகளை முறை தவறிப் பேசுவது.
- ஹறாமான வேலைகள் மறறும் விபச்சாரம் செய்வது.
- வுழு இல்லாமல் குர்ஆனை தொடுவது
- இரவில் வரும் யாசகர்களுக்கு எதையும் கொடுக்காதிருப்பது
- மலசலம் கழிக்கும் போது பேசுவது
- கை கழுவாமல் சாப்பிடுவது
- நில வாசற்படியில் அமர்வது
- ரொட்டி மற்றும் உணவுப் பொருட்களை யாசகர்களிடமிருந்து விலைக்கு வாங்குவது.

# அம்பாறை மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரே வரவேண்டும்

அதிர்ச்சி

வாழைச்சேனை பிரமுகர்கள் மத்தியில் பசீர் சேகு தாவூத் எம்.பி

அம்பாறை மாவட்டத்திலிருந்து வரும் மு.கா. எம்.பிக்கள் கட்சியை ஆட்டிப்படைக்கலாம் என எண்ணுகிறார்கள். முஸ்லிம் காங்கிரஸுக்கு இனிவரும் தேர்தல்களில் அம்பாரையில் ஒரு எம்.பியே வரவேண்டும். இப்போது அங்கு நடந்து கொண்டிருப்பது அனைத்தும் ஒரு வகையில் நல்லதுக்கே! இக்கருத்தினை நான் தலைவரிடமும் சொல்லி இருக்கிறேன். அவரும் அதனையே மையப்படுத்தி செயற்பட்டு வருகிறார். இப்போது அங்கு யாருக்கும் அதிகாரம் இல்லை. கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் அதிகாரத்தை தலைவர் எனக்கே தந்துள்ளார். என்னை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். நான் உங்களுக்கு அனைத்தையும் செய்வதற்கு தயாராகவிருக்கிறேன். அம்பாறையில் தலைவருக்கும் கட்சிக்கும் விசுவாசமான ஒருவர் வந்தால் எமக்குப் போதும்; மூன்று பேர் வருவதால் அவர்களுக்கே எல்லாம் வேண்டும் என்கிறார்கள். அடுத்த முறை அம்பாரையில் ஒரு முஸ்லிம் பிரதிநிதித்துவம் வரவேண்டும் என்ற அடிப்படையிலேயே நாம் வேலை செய்கிறோம். அது ஹரீஸா? அன்வர் இஸ்மாயிலா? அல்லது வேறு யாருமா? என இப்போது சொல்ல முடியாது!

பசீர் சேகுதாவூத் இப்படிப் பேசியதற்கு எம்மிடம் நேரடியான சாட்சியங்கள் உள்ளன. இச்செய்தியை எழுதும் நானே அச்சந்திப்பில் கலந்து கொண்டேன்! பசீரின் அந்தக் கருத்தினை கேட்டு நானே அதிர்ந்து விட்டேன்.

ரவூஃப் ஹக்கீமை வைத்துக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸை ஆளலாம் என்ற அதிகாரத்தின் மமதை முஸ்லிம்களின் நியாயமான அரசியல் பிரதிநிதித்துவத்தை திட்டமிட்டு அம்பாரையில் அழிப்பதில் வந்து இன்று நிற்பது தெரிகிறது. முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு அம்பாரையில் ஒரு பிரதிநிதித்துவம் போதுமானதாக இருக்கலாம். ஆனால் அம்பாரை முஸ்லிம்களுக்கு உரித்தான 3 பிரதிநிதித்துவமும் நமது மக்களுக்கு வேண்டும்.

தேர்தலில் போட்டியிட்டு பல்லாயிரக் கணக்கான மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கு தொடர்ந்தும் பின் கதவால் பாராளுமன்றம் வந்து ஹக்கீமின் மடியில் சௌகரியமாக அமர்ந்து கொண்டு அம்பாரை முஸ்லிம் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு வேட்டு வைக்க எண்ணுவது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைமைகள் மிக்க அவதானமாக இருப்பது நல்லது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் இந்த விடயத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் பசீர் 1989 இல் ஈரோசில் கேட்டுத் தோல்வி, 1994, 2000, 2001 ஆம் ஆண்டுகளில் முஸ்லிம் காங்கிரஸில் கேட்டுத் தோல்வி. எதிர்வரும் பொதுத் தேர்தலில் எப்படியாவது மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வென்று விட வேண்டும் என்ற ஆவலில் இப்போது உலவித் திரிகிறார். காத்தான்குடியில் பசீருக்கு வாக்குகள் விழாது! ஏறாவூர் நிலவரம் நமக்கு தெரிந்த கதைதான்.

முகைதீன் அப்துல் காதரின் சுகவீனத்தை பயன்படுத்தி ஓட்டமாவடியிலும் வாழைச்சேனையிலும் புகுந்து வாக்குகளை அள்ளிக் கொள்ளலாம் எனக் கனவு காண்கிறார். 4000 ஆம் வாக்குகளுக்கு மேலாக நான்கு தேர்தல்களில் பெறமுடியாத பசீர் இம்முறையும் போட்டியிடுவது மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கே ஆபத்தாக முடியும்!

ஆகக் குறைந்தது மட்டக்களப்பு மாவட்டத்தில் எம்.பியாவதற்கு 40 ஆயிரம் வாக்குகள் எடுக்க வேண்டும். பசீரால் அது முடியுமா? அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் பசீருக்கு ஏன் இப்படியான கடுப்பு? அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும்.

*ஏ.ஆர்.சரிப்தீன், ஓட்டமாவடி.*

# "முஸ்லிம் குரல்" நாளிதழாக வெளிவர வேண்டும்!

கடந்த 4 கிழமைகளாக "முஸ்லிம் குரலை" வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. உண்மையில் இலங்கையில் வாழும் சுமார் 15 லட்சம் முஸ்லிம்களின் குரலாகவே இருந்ததினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனையிட்டு பாராட்டும், ஆதரவும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தற்பொழுது சமாதானம் நிலவும் இக்காலகட்டத்தில் சிங்களவர்களும் அவர்களின் நலன்சார்ந்த கட்சிகளும் ஒன்று சேர்ந்து இருப்பது போல், தமிழர்களும் தமிழ் குழுக்களும் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் வந்துள்ளனர். ஆனால், முஸ்லிம்கள் மட்டும் இதுவரை ஒற்றுமைப்படவில்லை. கட்சி ரீதியாக, பிரதேச வாரியாக, ஆத்மீக ரீதியாக பிரிந்துள்ளனர். இருந்தும் பத்திரிகைகளில் ஒற்றுமைப்பட வேண்டும் என சகலரும் அறிக்கை விடுகின்றனர். இதற்கு பஞ்சமே இல்லை.

இலங்கை முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவதில் முஸ்லிம் குரல் முன்னின்று உழைக்க வேண்டும். கட்சி சாராமல் நடுநிலைமை வகித்து வாராந்த இதழ் காலப்போக்கில் நாளிதழாக மலர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன். மேலும் சம்மேளத்தின் சார்பாக பாராட்டையும், ஆதரவையும்தெரிவித்துக் கொள்கின்றோம்.

*எம்.ஐ.எதுமாலெப்பை,*
*தேசியப் பணிப்பாளர்,*
*அம்பாரை மாவட்ட முஸ்லிம் லீக் சம்மேளனம்*

# அமெரிக்க அராஜகம் முழு உலகிலும் முடிவுக்கு வரவேண்டும்

## கிழக்கு முஸ்லிம் தொழில் தகைமையாளர் ஒன்றியம் அறிக்கை

அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப்படையின் ஈராக் மீதான காட்டுமிராண்டித் தனமான ஆக்கிரமிப்பு மனித உரிமைகளுக்கும் - நாகரிகத்திற்கும் எதிராக இழைக்கப்பட்டுள்ள காலத்தால் அழியாத கருமைமிக்க வடுக்கள் ஆகும். இறைமை மிக்க கௌரவமுடைய மக்கள் வாழும் ஒரு நாட்டுக்கும் அதன் தலைவருக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் இத்தகைய அடாவடித்தனங்களைத் தடுத்து நிறுத்த உலக நாடுகள் தயங்கி நிற்பதானது - உலக மக்களின் எதிர்காலத்தையும் - உலக சமாதானத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. அமெரிக்க அடாவடித்தனத்தையும் கொடுமைகளையும் முழு உலகமும் ஒரே குரலில் கண்டிப்பதுடன் ஆக்கிரமிப்பாளர்களை ஈராக்கிய மண்ணில் இருந்து உடன் வாபஸாக்குமாறும் கோர வேண்டும்.

அமெரிக்காவின் கண்மூடித்தனமான காரணமற்ற யுத்தம் காரணமாக ஈராக்கில் குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர் - யுவதிகள், வயோதிபர்கள் என்று நூற்றுக் கணக்கில் அப்பாவிகள் கொல்லப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் வருவதோடு பல நூறுபேர் பல ஆண்டுகளாக அங்கவீனர்களாக வாழ வேண்டிய பரிதாப நிலைக்கு உள்ளாகப் போகின்றார்கள்.

அப்பாவி மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளுக்கு கொடும் கோன்மைக்கார அமெரிக்க - பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளர்கள் நிச்சயம் பதில் சொல்ல வேண்டிய காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை எமது ஒன்றியம் நினைவூட்ட விரும்புவதாக கிழக்கு முஸ்லிம் தொழில் தகைமையாளர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது..

# கேள்விக்குறி!

ஆசையும் ஆற்றாமையும்
சிலவேளை புதுமைகளை
விளைவிக்கலாம்!

பயப்படு மளவு
பயங்கரப் போர்முறை
பயன் படுத்தியோரை
பலவீனப் படுத்தி
பயப்படு மளவு
ஆக்கியோர் மறைவர்!

ஆசையை ஆட்சியில்
அதிகம் வைத்தவர்
பலம்பெற உடனே
பலவீன மடைந்த
பயங்கர வாதிகள்
பக்க பலன்களைப்
பெறுவர்!

பயங்கரம் பலவீனப்படுவதும்
ஆட்சியில் பலம்பெற
நினைப்பதும்

ஆசையும் ஆற்றாமையும்
இணைவதை ஒரு
புதுமையாய்க் கொள்ளும்!

இப்புதுமையில் ஆசை
கொண்டவர் நிலையோ
[illegible]

*கவிஞர் ஏ.இக்பால்*

வாசகர்களின் கவனத்திற்கு! முஸ்லிம் குரலின் இதுவரையான இதழ்களைக் கேட்டு நாட்டின் நாலாபாகங்களிலிருந்தும் நமது மக்கள் கடிதம் எழுதிக்கொண்டிருக்கின்றனர். ஒன்று தொடக்கம் ஆறு இதழ்கள் வரையான சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. பிரதிகள் தேவையானோர் உடன் எமக்கு ரூபா 60க்கான காசுக் கட்டளையை அல்லது காசோலையை அனுப்பி பெற்றுக்கொள்ள முடியும். காசுக்கட்டளை அனுப்புவோர் **Muslim Kural Publication, Slave Island Post Office** எனக் குறிப்பிடவும்

**முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்**

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

**சந்தா விபரம்!**

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 120/-

6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 240/-

1 வருடம் - (48 இதழ்கள்) - 480/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பிவைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslimkural Publication, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

**முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு அனுசரணையாளர்களாக விளம்பரம் செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் நிரந்தரமான நண்பர்களும் இல்லை, நிரந்தரமான பகைவர்களுமில்லை...

"சமகால அரசியல் நிலை" என்ற தலைப்பில் ஹரீஸ், சேகு இஸ்ஸதீன் எம்.பி ஆகியோர் அக்கரைப்பற்றில் நடத்திய கருத்தரங்கில் "மூன்றாவது அணியென்ற" பெயரில் இளைஞர்கள் சில கேள்விகளை கேட்டனர். அக்கேள்விகள் அச்சிடப்பட்டும் அங்கு விநியோகிக்கப்பட்டன. ஹரீஸ் எம்.பி. அக்கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை. அக்கேள்விகளுக்கு பதில் அளிக்கத் தேவையில்லையென சேகு இஸ்ஸதீன் எம்.பி. கூறினாராம். அதனால் ஆத்திரமடைந்த இளைஞர்கள் பதில் அளிக்கப்படல் வேண்டுமென வற்புறுத்திய போது முரண்களும், மோதல்களும் ஏற்பட்டதாக நமது செய்தியாளர் தெரிவிக்கிறார். அக்கேள்விகளை நீங்களும் வாசித்துப் பாருங்கள்.

***அக்கரைப்பற்றுக்கு சமகால அரசியல் நிலைமைகள் பற்றி பேசவரும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், அவர்களிடம் சில கேள்விகள்....***

✱ சக்தி எ.்.ப். எம். மின் மின்னல் நிகழ்ச்சியில் பா.உ. சேகு இஸ்ஸதீன் அவர்களுடன் பேசும் போது ஐக்கிய தேசிய முன்னணியுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு தேர்தல் உடன்படிக்கை செய்துள்ளதாகக் கூறியுள்ளீர்கள். அப்படியிருப்பின் அதன் உள்ளடக்கங்கள் என்ன? அதில் உங்கள் தலைவர் தனித்தரப்பு விடயத்தைப் பற்றி ஏன் வலியுறுத்தி உள்ளடக்கவில்லை? இதுவரைக்கும் நீங்கள் செய்த இரகசிய ஒப்பந்தத்தில் உள்ளடக்கிய விடயங்களில் நடைமுறைப் படுத்தப்பட்ட விடயங்கள் என்ன?

✱ புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் முஸ்லிம்களின் விடயத்தை உள்ளடக்காதது சரியா? பிழையா? நீங்கள் அதனை உங்கள் போதாமையின் காரணங்களால் சரியென நியாயப்படுத்த முனைந்தமை உங்களுக்கு நினைவிருக்கிறதா? பிழையெனின் நீங்கள் செய்த மாற்று நடவடிக்கைகள் என்ன?

✱ தனித்தரப்பு விடயத்தை முற்று முழுதாக நிராகரிப்பதற்கான முதல் நடவடிக்கையாக வன்னியில் செய்யப்பட்ட பேச்சுவார்த்தையின் பின் முஸ்லிம்களுக்கு பாதகமாக அமைந்த கூட்டறிக்கையில் அவசரப்பட்டுக் கையொப்பமிட்டதும், அதனை முஸ்லிம்களின் உரிமை சாசனமென்று நீங்கள் கூறியதும் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

✱ அக்கூட்டறிக்கையின் பின்னர் மூதூரிலும், வாழைச்சேனையிலும் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக நீங்கள் எடுத்த எதிர்நடவடிக்கைகள் என்ன? அவ்வடக்கு முறைகளைக் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்த அரச படைகளுக்குப் பொறுப்பான திலக் மாரப்பனவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராய் வாக்களித்ததுதான் உங்கள் கட்சியினதும் உங்களினதும் எதிர் நடவடிக்கையா?

✱ தனியலகு கேட்டுப் பாராளுமன்றப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்ட உங்களையும், உங்கள் குழுவினரையும் அட்டாளைச்சேனையில், உங்கள் தலைவர் தனியலகு கேட்டு பகிஸ்கரிப்பில் ஈடுபட்டார்களே கிடைத்ததா? எனக் கிண்டலடித்தாரே அதற்கு. உங்கள் பதில் என்ன? அவர் காலடியில் மண்டியிட்டதுவா?

✱ அன்ரன் பாலசிங்கம், "நீங்கள் ஒற்றுமைப் பட்டுக் கொண்டு வாருங்கள், தனித்தரப்புப் பற்றிப் பேசுவோம்" எனக் கூறினாரே, நீங்கள் வடகிழக்குப் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் என ஒற்றுமைபட்டுக் கொண்டு போனீர்களே! தனித்தரப்பு சாத்தியப்பட்டுவிட்டதா? தனித்தரப்பை அரசு, புலிகள், நோர்வே மூன்று தரப்பினரும் நிராகரித்து விட்டனரே உங்கள் மாற்று நடவடிக்கை என்ன?

✱ இன்றைய பேச்சுவார்த்தையில் எதனையும் அடைந்து கொள்ள முடியாது என மிகத் தெளிவாகத் தெரிந்த பின்னரும் உங்கள் தலைவர் இன்னும் பேச்சுவார்த்தைக்குப் போகத்தான் வேண்டுமா?

✱ நீங்களும் உங்கள் தலைவரும் முஸ்லிம் காங்கிரஸ் பேரம்பேசும் சக்தி என்று சொல்கிறீர்களே, நீங்கள் பேசிய பேரம்தான் என்ன? முஸ்லிம்களின் அபிலாசைகளை குழிதோண்டிப் புதைக்கின்ற அரசாங்கத்தில் இன்னும் ஏன் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? ரணில் உங்களுக்குச் செய்த கைங்கரியந்தான் என்ன?

இந்தக் கேள்விகளுக்கு புத்திசாதுரியத்தனமாக நீங்கள் பதிலளிப்பீர்களென நாங்கள் எதிர்பார்க்கிறோம். தவறும் பட்சத்தில் நாங்களும் மக்களோடு பேசத்தானிருக்கிறோம்.

*-மூன்றாவது அணியினர்.*

# யாழ் ஐந்து சந்திப் பகுதி தாக்குதல், மூதூர் முஸ்லிம் - புலி உறவுகள்

## பார்வையும், பதிவுகளும்

எல்லோரினதும் பார்வையும் தற்போது சர்வதேச அரங்கிற்குள் திரும்பியிருக்கிற வேளை, உள்நாட்டில் நம்மைச் சூழ நடக்கின்றவைகள் கண்டுகொள்ளப்படாத விடயங்களாக மாறிக் கொண்டு வருகிறதோ என்ற அச்சத்தைத் தருகிறது.

கடந்த சனியன்று யாழ். ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் "கோஷ்டி மோதல்" சம்பவம் வெறும் செய்தியாகவும் நமது கண்ணிலும் படாமல் போயிருக்கிறது. யாழில் மீளக் குடியேறியிருக்கும் முஸ்லிம்கள் மீது தமிழர் தரப்பு மேற்கொண்டுள்ள அத்துமீறலாகவே இது பற்றிய செய்திகளை வாசிக்கையில் அறிய முடிகிறது. 24.03.2003ம் திகதிய வீரகேசரி "யாழ் ஐந்து சந்திப் பகுதியில் கோஷ்டி மோதலில் எண்மர் காயம்" என்ற தலைப்பில் இச்செய்தியை அமுக்கியதுடன் "இம்மோதலுக்கான அடிப்படைக் காரணம் பற்றி முரணான தகவல்கள் நிலவுகின்றன" என்று நழுவியும் விட்டிருக்கிறது.

இந்த நழுவல் செய்தியும், அதன் வெளிப்பாட்டு முறையும் முஸ்லிம்கள் ஏதோ சக்தியால் இலக்காக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிவிடுவதோடு அதற்காக இடப்பட்ட தலைப்பு மக்களின் அவதானக் குவிப்பையும் திருப்பிவிடுகிறது.

செய்தியில் ஒரு பந்தியில் "..... சுபாசினியின் தலையில் போத்தலால் அடித்து *படுகாயப்படுத்தியதாகவும்* தெரிய வருகிறது என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்படும் "படுகாயமடைந்தோர்" பட்டியலில் சுபாசினியின் பெயரில்லை. காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளோர்களின் பெயர் குறிப்பிட்டிருக்கும் நபர்களில் அறுவர் முஸ்லிம்கள்! இதற்கான காரணம் பற்றி முரணான தகவல்கள் நிலவுவதாக ஒரே விதமாகவே இன்னொரு தமிழ் தினசரியும் செய்தி வெளியிட்டிருப்பது சந்தேகத்தையும் பயத்தையும் தருகிறது.

✦ ✦ ✦ ✦

கடந்த செவ்வாய் இரவு மூதூர் பிரதேச சம்பூர் பகுதியில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான முச்சக்கர வண்டி புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இதில் பயணம் செய்த தமிழ் வாலிபர், தான் ஒரு புலி என்றும், சம்பூர் புலிகளின் எல்லையைக் கடப்பதில் பிரச்சினை இல்லையென்றும் தெரிவித்ததை அடுத்து ஆட்டோ சாரதி அவர் சொன்ன இடத்திற்குப் பயணிக்கையில் புலி உறுப்பினர்களால் தடுத்து வைக்கப்பட்டு இரவு பதினொரு மணி வரை இவர் தாமதிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். வரும் வழியில் நாய்க் கடிக்கும் உள்ளாகி மறுநாள் காலையிலேயே இவர் மூதூர் திரும்பியது குறிப்பிடத்தக்கது.

புதன் மாலை ஐந்து மணியளவில் முச்சக்கர வண்டி திருப்பித்தரப்படும் என்ற தகவலையடுத்து, அங்கு சென்ற ஆட்டோ ஒட்டிகள் சங்கப் பிரதிநிதியும், மற்றும் இருவரும் நீண்ட நேரம் உரையாடல் பரஸ்பரக் குற்றஞ்சாட்டல்களின் பின்னர் இரவு 11 மணியளவில் வண்டியைப் பெற்றுத் திரும்பியுள்ளார்.

இதேவேளை மூதூரின் இன்னொரு புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசமான இறால் குழியை அண்டிய பிரதேசத்தில் விறகுக்காக சென்ற வண்டில்களும், மாடுகளும் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த செவ்வாயன்று இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வண்டில் சொந்தக்காரர்களிடம் 7000 ரூபா கப்பம் கோரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் விறகுக்காக வருபவர்கள் மாதா மாதம் 500 ரூபா செலுத்தும்படியும் கேட்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. வண்டில் உரிமையாளர்கள்



சிலர் 2000 ரூபா செலுத்தி வண்டில்களை பெற்று வந்திருப்பதாகவும், அவர்களின் அன்றாடப் பிழைப்புக்கு வேறு வழியில்லாத காரணத்தால் இவற்றை அனுசரித்துப் போவதாகவும் அறிய முடிகிறது.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக மூதூர் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மற்றும் சம்மந்தப்படாத முஸ்லிம்களும், புலிகளும் கவனிக்க வேண்டிய சில குறிப்புகள்.

1. பொதுவாகவே எங்கும் அத்துமீறி நடக்காதீர்கள்.

2. எல்லோருக்கும் ஏற்புடையதான பயன்தரத்தக்கதான ஆலோசனைகள் சட்டங்கள் போடப்பட்டிருந்தால் அதை மதியுங்கள். உதாரணத்திற்கு, விறகுக்காகச் செல்வோர் பெறுமதியான பச்சை மரங்களை வெட்டுவதாகவும், குறுக்குப் பாதைகளூடாக சென்று வருவதாகவும் அடிக்கடி குற்றம் சாட்டப்படுகிறீர்கள். அது உண்மையானால், தவிர்த்துக் கொள்ளுங்கள். பசுமை வளம் மனித குலத்திற்கு இன்றியமையாத ஒன்று.

அதேவேளை புலிகளே! உங்கள் பகுதிகளிலிருந்து விறகு கொண்டு வருபவர்களையும், அவதானியுங்கள். அவர்கள் நேர்த்தியான பச்சை மர விறகுகளை கொண்டு வந்து காசாக்கிச் செல்கிறார்கள். (இதில் உங்கள் கவனம் பசுமை வளத்தின் மீதுதான் இருக்கும் என நினைக்கிறேன்)

3. புலிகளின் பொறுப்பான தலைமைகளே! உங்கள் பிராந்தியப் பிரதிநிதிகளை அல்லது உங்கள் பெயரைச் சொல்லி உலா வருவோரை அவதானியுங்கள். சட்டங்களை மீறுவோராக நீங்கள் காண்போர் மீது நீங்கள் நடவடிக்கையை உரிய முறையில் எடுக்கலாமே. அதை விடுத்து ஏன் பண வசூலிப்பு, கொலை மிரட்டல், தடுத்து வைப்பு? வேண்டுமானால் உங்கள் பொலிசில் உண்மையான குற்றத்தை பதியுங்கள் (எங்கள் ஒருவரைக் கொண்டுதானே உங்கள் காவல்துறையை சம்பூர் - திறந்தும் வைத்தீர்கள்!)

✱ இறால் குழியிலுள்ள புலிகளை, அவர்களின் நடவடிக்கைகளை நீங்கள் கண்டு கொள்ளாதிருக்கிறீர்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் அதனால் ஏற்படும் விளைவுகள், பொறுப்புகள் யாரைச் சாரும்? பொதுவாக உங்கள் பகுதிகளில் கூட உங்கள் கட்டுப்பாடு கிடையாதென, அதாவது உங்களால் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை உங்கள் ஊது குழல்களே எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக் கின்றன.

✱ பொதுவாக மூதூரைப் பொறுத்தவரை வர்த்தக நடவடிக்கைகளில் இரு சமூகங்களும் பரஸ்பரம் தங்கியிருக்கக் கூடிய நிலையிலிருக்கிறோம். இதனடிப்படையில் மிகுந்த புரிந்துணர்வாகவும், விட்டுக் கொடுப்பாகவும் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

✱ வாக்குறுதிகளை வழங்கிவிடலாம் நடைமுறைப்படுத்துவது தான் கஷ்டம். குறைந்தது சர்வதேச சமூகத்து முன்னிலையில் நீங்கள் வழங்கியிருக்கும் முஸ்லிம்கள் தொடர்பான ஓரிரு வாக்குறுதிகளையாவது காப்பாற்றுங்கள்

✱ இந்த யுத்த நிறுத்த காலத்தில் நடக்கும் அத்து மீறல்களை பொலிசில் மட்டுமல்ல போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும ஒரு பதிவுக்காக வேணும் முறையிடுங்கள். (கொழும்பில் முழு நேர கணக்காளராக இருக்கும் எங்கள் பிரதிநிதியை நாங்கள் எங்கே அவசரத்தில் தேடுவது என்று முணுமுணுக்கிறீர்களா? அப்படியானால் அவருக்கு எதிராகவும் முறையிடலாமே?)

*மூதூர் ஏ.எம் சப்ரான்.*

## முஸ்லிம்களின் உரிமைக் குரல

முஸ்லிம் குரல் இலங்கை வாழ் முஸ்லிம்களின் உரிமைக் குரலாக ஒலிக்கும் என்பதில் சந்தேகமில்லை. கட்சி சார்பற்ற ஒரு குரலாக முஸ்லிம் குரல் ஒலிக்க வேண்டும். ஏனெனில் குரலின் ஆயுள் நீட்சியாக அமைதல் காலத்தின் தேவை.

வந்த வேகத்தில் மறைந்து விடும் விட்டில் பூச்சி போன்றதாக முஸ்லிம் குரல் அமைந்து விடக் கூடாது வெளி வந்த அனைத்து குரல்களிலும் கம்பீரமிருக்கிறது; காத்திரமிருக்கிறது, கனதி இருக்கிறது என்ற வகையில் திருப்தி. ஆதரவும் என் பிராத்தனையும் குரலுக்குண்டு.

ஓட்டமாவடி, எம்.பீ. நளீம்,
(கிழக்கு வளாகம்)

## முஸ்லிம் குரல் செய்திகள் நம்பகத்தன்மையுடையன.

முஸ்லிம் குரலில் வரும் அனைத்து செய்திகளும் ஆதார பூர்வமானதாகவும், உண்மையானதாகவும் இருப்பது வரவேற்கத்தக்கது. இன்றைய காலசூழ்நிலையில் முஸ்லிம்ளின் உரிமை குறித்துப்பேச பத்திரிகை ஒன்று இருப்பதையிட்டு உள்ளம் உவகையடைகிறேன். குறை ஆயுள் உள்ள பத்திரிகைகளின் வரிசையில் முஸ்லிம் குரலும் உள்ளடங்கிவிடக்கூடாது. இடையறா முயற்சிதொடர எனது வாழ்த்துக்கள்.

"சுயம்" பத்திரிகையிலிருந்து இன்றைய "முஸ்லிம் குரல்" வரை தொடர்ந்து வாசிக்-கின்றேன். கருத்துக்களை உள்வாங்கிக்கொள்கிறேன். இரு சமூகங்களாலும் இடிபாடுகளுக்குள்ளாக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் உரத்துப்பேசப்படவேண்டும். கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்ற அவாவோடு காத்திருக்கின்றேன்.

*மஜீட் எம்.எம்.நாஸிக், கிண்ணியா 05.*

## ஒரு யுகத்தின் முரசு

ஈராக்
இதயங்களின் ஓசையில்
எழுந்தழும்
தாளங்கள்

வேகங்கள் மீதும்
வீராப்பு பேசும்
சாயங்கள் மீதும்
மாணியங்களாகும்
சாமான்ய மோகங்கள்

விடாத சூடு
அடாது சூழ்கையில்
பசளைத் தரைக்கு அதை
பாசணமாக்கி
மனிதத்தைக் கொல்லும்
நரகாசுரக் கோலங்கள்

அடித்தவன் இருக்க
அம்பை
நோவுகிற வல்லரசின்
போலிப் புளகாங்கிதமா?
பயந்தாங் கொல்லி
படமெடுப்பா?

விஷத்தை
விரைவாய்க் களையும்
காரியமிருக்க
உடும்பாய் அணியும்
உக்கிரம் ஏன்?

அக்கிரமம் செய்யும்
அராஜகத்தில்
அடி வாங்க வேண்டியது
அபலைகள் மட்டும் தானா?

குள்ள நரிக்கு
குடை பிடிக்க
இரண்டு மூன்றன்றி
முன் வருவதொன்றுமில்லை
உற்றவன் கூட
உதாசீனம் செய்கிறான்
நம்மவன் மட்டும் தான்
வேறாகிப் போறான்

போர் என்றால்
புண் என்று அர்த்தம்
இவன் - போரால்தான்
புண்ணாறும் என்கிறான்

துச்சாதனத் தூரிகையாகி
வல்லரசு ஆவணங்களால்
இவன் - நம்மவனையே
வழிமறிக்கும் வேலியாகிறான்

ஒரு முறை புயலோடு
உலகம் எழுந்து நிற்கையில்
புன்னகை கொண்டு
புவியைப் புரட்டிப் போட
நரியோடு பயணிக்கிறான்

நம்மவன்
வழிதவறி வந்தாலும்
வழி எடுத்துப் போடாமல்
வீற்றிருக்காதவன்
அன்னியனுக்கோ
அமர ஆசனம் கொடுத்து
ஆசீர்வதிக்கிறான்

வைக்கும் விஷம்
நம்மவனுக்கென்பதை
நன்றறிந்தும்
ஆத்திரப்படாமல்
நாலிபாகம் அருந்திக் கொண்டு...
நங்கையரை வருடிக் கொண்டு...
அன்னியன் காலடியில்
ஆதாயம் தேடுகிறான்

ஈராக் மட்டுமல்ல
இலங்கையும் இதற்கொன்றும்
விதிவிலக்கல்ல, புரிந்து கொள்ளும்

*-அம்தரவல்ல நிலா[illegible]*

## நமது ஆளுமைகள்

மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத்

⑥

வரலாற்றுக்கும் தனிமனித வாழ்க்கை சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஏனெனில் சமூக மேம்பாட்டுக்காக உழைத்த சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் சிலரது வாழ்வு நமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. நமது சமூக உருவாக்கத்திற்கு அவர்களது பங்களிப்புக்கள் பக்கத் துணையாக நின்று உரமாகியுள்ளது. நமக்கும் இந்த ஆளுமைகளின் இலட்சியங்களும் இலக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும். அம்மாபெரும் ஆளுமைகளின் பதிவுகளை நமது நிகழ்கால சந்ததியினருக்கும், எதிர்காலத்திற்கும் கையளிப்பதே இத்தொடரின் நோக்கம். நீங்களும் நமது சமூக ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை எமக்கு எழுதலாம்.
(பிரதம ஆசிரியர்)

இறை நம்பிக்கையிலே மிகவும் ஊறிக் கிடந்த பதியுத்தீன் தனக்கு ஏற்பட்டுக் கொண்டு வருகின்ற இன்னல்கள் யாவற்றையும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அதற்கு மாறாகத் தன்னை நோக்கி வெற்றியே காத்துக் கொண்டிருக்கின்றது என்ற நம்பிக்கையை வரவழைத்துக் கொள்வார். "எனக்கு ஏற்பட்டுள்ள வாழ்வுப் பரீட்சைகளையும், இன்னல்களையும் ஒரு உண்மை முஸ்லிமாகவே இருந்து முகம் கொடுப்பதற்காக அல்லாஹ் எனக்கு தைரியத்தைத் தந்திருக்கிறான்" என்றே அடிக்கடி பிரார்த்தித்துக் கொள்வார். அல்லாஹ்வின் சோதனைக்கும் உட்பட்ட பதியுத்தீன், அல்லாஹ்வின் மீது வைத்திருந்த நம்பிக்கையில் அணுவேனும் அசையாது அதிலும் வெற்றியே கண்டார்.

கொழும்பு சாஹிராக் கல்லூரியில் இருக்கும் பொழுது அவ்வாறு இளைஞன் பதியுத்தீன் பலவிதமான வெளிவேலைகளுக்கும் இன்னல்களுக்கும் மத்தியிலும் பரீட்சையில் சித்தியடைந்தாரோ, அதே போன்று அலிகார் சர்வ கலாசாலையிலும் பலவிதமான வெளிவேலைகளுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் நடைபெற்ற முதல் பரீட்சையில் சித்தியடைந்தார். இஸ்லாத்திலே நூற்றுக்கு நூறு புள்ளிகளைப் பெற்று ஒரு சாதனையை நிலைநாட்டினார். இது ஒரு பரீட்சையில் சித்தி மட்டுமல்ல அவருக்குக் கிடைத்த ஒரு பெரும் வெற்றி என்றே கூறலாம். வரலாறு என்னும் பாடத்திலே கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் மாணவனாக வந்தார். ஜனாப் பதியுத்தீனுக்கு இப்பரீட்சை முடிவுகள் மிகவும் திருப்திகரமாக காணப்பட்டது.



இப்பரீட்சை முடிவுகளினால் ஆப்கானிஸ்தானுக்கு அலிகார் சர்வ கலாசாலையினால் செல்ல இருந்த தூதுக் குழுவிலே அவரும் ஒரு அங்கத்தவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். மாணவர்களும் விரிவுரையாளர்களும் ஜனாப் பதியுத்தீன் ஆப்கானிஸ்தான் வரலாற்றுத் தூதுக் குழுவில் அங்கம் வகிப்பதை மிகவும் மகிழ்ச்சியுடனே ஏற்றுக் கொண்டனர். இத்தூதுக் குழு அங்கத்தவர்கள் யாவரும் ஆப்கானிஸ்தான் மாட்சிமை தங்கிய அரசர் நாதிர் கான் அவர்களது அரசாங்க விருந்தினர்களாக அங்கு தங்கும் படியான ஏற்பாடுகளும் நடந்து விட்டன. ஜனாப் பதியுத்தீனின் திறமையின் எடுத்துக் காட்டாக இப்பாக்கியம் அவரை நோக்கி வந்தது.

தூதுக் குழுவில் சென்ற அங்கத்தவர்கள் யாவரும் ஜனாப் பதியுத்தீன் அவர்களது திறமைகளை உணர்ந்து கொண்டனர். ஆங்கில மொழி மீது இருந்த திறமையைக் கண்ட அவர்கள் அவரை மெச்சினர். சக மாணவர்களுக்கு மேலும் ஜனாப் பதியுத்தீன் அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பும் ஏற்பட்டுவிட்டது. இவ்வளவு திறமைகளைக் கொண்ட பதியுத்தீன் பாரசீக அல்லது உருது மொழி தெரியாமல் இருக்கின்றாரே எனப் பலர் கவலைப்பட்டனர். எல்லோரும் உருது, பாரசீக மொழிகளில் பேசிக் கொண்டு செல்லும் பொழுது ஜனாப் பதியுத்தீன் மாத்திரமே ஆங்கில மொழி பேசிக் கொண்டு சென்றார். இதனால் பாரசீக, உருது மொழி பேசிக் கொண்டு செல்பவர்களோடு சேர்ந்து தானும் களியாட்டமாகச் செல்ல இயலவில்லையே என அவரது குறைகளையும் உணர்ந்து கொண்டார்.

தனது நாளாந்த தேவைக்கேனும் இம்மொழிகளை அறிந்திருக்காவிட்டால், தன்னால் தயார் படுத்தப்படும் உயர் கல்விப் பிரபந்தத்துக்கான செய்திகளைச் சேகரித்துக் கொள்வது கூட மிகவும் கடினமான காரியமாகவே இருந்தது.

ஆப்கானிஸ்தான் சென்றதும் அங்கே ஆங்கிலம் தெரிந்த ஒரு உயர் அதிகாரி ஜனாப் பதியுத்தீனுக்கு அழைப்பு விடுத்தார். அழைப்பை ஏற்று அங்கு செல்லும் பதியுத்தீன் அவர்கள் சில நாட்களில் அதிகாலை ஒன்று, இரண்டு மணிவரை அவ்வதிகாரியுடன் கலந்துரையாடல்களை நிகழ்த்தினார். ஆப்கானிஸ்தானத்தின் முன்னேற்றம் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள புதிய இயக்கத்தைப் பற்றிய அவர் பல கேள்விகளைக் கேட்டுத் தெளிவும் பெற்றார். பதியுத்தீன் அவர்களுக்கு அவ்வதிகாரியிடமிருந்து முற்றான பதில்கள் கிடைத்தன. காரியாலய தஸ்தாவேஜுகளோடும் புள்ளி விபரங்களோடும், பலவகையான நாட்டின் ஆழமான கட்டிடங்களையும் கட்சிகளையும் சித்தரித்துக் காட்டும் புகைப்படங்களோடும்தான் அவருக்குப் பதில்கள் கொடுக்கப்பட்டன, இதிலிருந்து அவ் ஆப்கானிஸ்தான் அதிகாரி ஜனாப் பதியுத்தீன் மீது எவ்வளவு பற்றுதல் வைத்திருந்தார் என்பதும், அவர் மீது பெரும் கௌரவமான முறையிலேயே அவ்வதிகாரி நடந்து கொண்டார் என்பதும் புலனாகின்றது.

அரசன் அமானுல்லாவின் கனவு நகராகிய தாருல் அமானின் புகைப்படங்களையும் கொண்டு வந்தார். தாருல் அமானை நோக்கிச் செல்கின்ற பிரதான பாதை மிகவும் மதிப்பும் போற்றக் கூடியதாகவுமே இருந்தது. அது பாரிஸிலுள்ள சான்ஸ் எலிஸி பாதை போன்றே காட்சி தந்தது. ஐந்து மைல் நீளம் கொண்ட பாதை (Champs De Elesyee) ஒவ்வொரு விதமான வாகனங்களுக்குமென ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

இஸ்தலப் என்னும் அழகு நகரம் ஒன்றும் இருந்தது. அந்நகரம் குன்றுகளினால் சூழப்பட்டிருந்தது. இவ்வாறான பலவிதமான புகைப்படங்களை அவர் சேகரித்துக் கொண்டார். அவர் தனது ஆப்கானிஸ்தான் பிரயாணத்தை இவ்விதமாகக் கழித்துக் கொண்டிருக்கும் காலத்திலே ஏனைய மாணவர்கள் வேறு வேறு விடயங்களில் மிகவும் உசாராகக் காணப்பட்டனர். சிலர் ஆப்கனிஸ்தானத்தில் வெளியாகும் சஞ்சிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவதில் காலத்தைக் கழித்தனர். இன்னும் சிலரோ ஆப்கானிஸ்தானம் எவ்வளவுக்கு அவர்களது மனங்களை ஈர்த்தன என்பன பற்றிய பேச்சுக்களை ஆங்காங்கே நிகழ்த்திக் கொண்டிருந்தனர். இவ்விதமான வேலைகளில் ஜனாப் பதியுத்தீன் அவர்கள் ஈடுபடவில்லை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சிக்குத் தன்னாலான முழு முயற்சியையும் எடுத்துத் தக்க தருணத்திற்குப் பாவிக்க ஆயத்தப்படுத்திக் கொண்டார். அவர் உண்மையிலேயே அப்பிரயாணத்தின் காரணமாக அடைந்த நன்மைகள் பல. அப்பிராயணம் அவரை வாழ்க்கையிலே வெற்றி பெறப் பல உற்சாகங்களை அளித்ததோடு தனது குறைபாடுகள் யாவை என அறிந்து கொண்டு அவற்றை எதிர்காலத்திலே நிவர்த்தி செய்து கொள்ளவும் வழி வகைகளை வகுத்தன.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நமது மக்களின் குரல்

## ஆதிக்க சக்திகளின் அடக்குமுறைக் குரலுக்கெதிராக நமது மக்களின் உணர்வுகள்

### முஸ்லிம் தேசத்தின் குரலின் திரட்சியை மலினப்படுத்தி, தமிழ் மேலாதிக்கத்தை திணிக்கும் தந்திரோபாயம் !

புலிகளும், தமிழா் கூட்டமைப்பினரும் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையைப் பத்திரிகையில் படித்தேன். ஆச்சரியமாகவிருந்தது. தமிழ் போராட்டக் குழுக்களால் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் அனுபவித்த கொடுமைகளும், அடக்குமுறைகளுமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், இந்தோ இலங்கை ஒப்பந்தத்தின் பின்னால் இன்றுவரை நடந்தேறிய நிகழ்வுகளில் முஸ்லிம்கள் எந்தளவில் நடாத்தப்பட்டார்கள் என்பது. நாங்கள் நேரடியாக அனுபவித்த அந்த துயரம் நிறைந்த நாட்கள் இன்னும் தொடர்கதையாக நீண்டு செல்கிறது.


[illegible] S.D.O மாவடிச்சேனை.

இன்னும், விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து போராட்டக்களத்தில் தங்கள் உயிரையும் அர்ப்பணித்த முஸ்லிம் இளைஞர்களையும் மறந்து, பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்களையும் கொன்றொழித்த புலிகள், எம்மை எந்த வகையில் ஏற்றுக் கொண்டு எமது உரிமைகளையும், எம் தனித்துவத்தையும் அங்கீகரித்து உறுதி செய்வார்கள் என்பதுதான் விளங்கவில்லை.

இந்நாட்டின் அரசாங்கங்கள் காலத்துக்குக் காலம் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றங்களையும் புதிது புதிதான உள்ளூராட்சி அமைப்புக்களையும் தோற்றுவிப்பது வழமை. அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று தெற்கில் தமிழ்ச் சகோதரர்களுக்கு கிரான் பிதேச செயலகமும், கோறளைப்பற்று மத்தியில் முஸ்லிம்களுக்குமான ஒரு பிரதேச செயலகத்தையும் ஏற்படுத்தியது. கோறளைப்பற்று மத்தியில் ஏற்படுத்தப்பட்ட பிரதேச செயலகம் தொடர்பாக விடுதலைப் புலிகளும் இந்த தமிழா் கூட்டமைப்பும் நடந்து கொண்ட விதத்தையும் பார்க்கும் போது, இவர்களா? எமது முஸ்லிம் சமூகத்தின் நியாயமான கோரிக்கைகளையும், சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரிக்கப் போகின்றார்கள்?

எமது பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான நெற் செய்கை நிலங்கள் இன்னும் விடுவிக்கப்படாது ஆக்கிரமிக்கப்பட்டும், தங்களது சொந்த நிலங்களை செய்கை பண்ணவிடாது தடுக்கப்பட்டும், கப்பம் அறவிடப்பட்டும் வருவதைத் தடுக்கவோ அல்லது இந்த அநீதி தொடர்பாக குரல் கொடுக்கவோ முடியாத மிதவாத தமிழ் அரசியல் தலைமைகளா எமது மக்களின் சகல உரிமைகளையும் நீதியான முறையில் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியும்?

இந்த சூழலில் முஸ்லிம் தேசத்தின் குரலின் திரட்சியை மலினப்படுத்தி, தமிழ் மேலாதிக்கத்தை திணிக்கும் இந்த அறிக்கை ஒரு தந்திரோபாயமே என்பதே எனது கருத்து.

### முஸ்லிம்கள் தனியான தேசிய இனம் என்றும் அவர்களுக்கு பிரிந்து செல்லக் கூடிய அதிகாரம் கொண்ட சுயாட்சிப் பிராந்தியம் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டு இருந்தது.

தமிழா் விடுதலைக் கூட்டணியின் தலைமை தாங்களில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் அண்மைக்கால போக்கு முஸ்லிம் சமூகத்தினரை பெரும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் பேசப்படும் காலத்தில் இருந்தே தீர்வுகள் தமிழருக்கு வேறாகவும், முஸ்லிம்களுக்கு வேறாகவும் கிடைப்பதன் மூலமே உண்மையான சமாதானம் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் நிலவும் என்ற போக்கு காணப்பட்டது. 1965 ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் கிழக்கில் இரண்டுக்கு மேற்பட்ட பிராந்தியங்களாக பிரிக்க வேண்டும் என்பதையும் முஸ்லிம்களுக்கு தனியான சுயாட்சி பிரதேசம் கிடைக்க வேண்டும் என்பதையும், 1977 ஆம் ஆண்டு தமிழா் விடுதலைக் கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம்கள் தனியான தேசிய இனம் என்றும் அவர்களுக்கு பிரிந்து செல்லக் கூடிய அதிகாரம் கொண்ட சுயாட்சிப் பிராந்தியம் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டு இருந்தது.

இன்று முஸ்லிம்கள் தங்களுக்கான முஸ்லிம் தேசமொன்றைப் பிரகடனப்படுத்தி தங்களது அரசியல் போக்கினை வெளிப்படுத்தியுள்ள இச்சூழ்நிலையில் இன்றைய தமிழா் அரசியலின் போக்கு கவலை தருவனவாகவே அமைகின்றது. எவ்வாறு முஸ்லிம்கள் தமிழரது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கவில்லையோ அவ்வாறே முஸ்லிம்களினது தலை விதியை தமிழரோ சிங்களவரோ தீர்மானிக்கக் கூடாது என்பது எமது விருப்பமாகும். தமிழ் தேசத்தின் விடுதலைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு உண்டு என்று ஏற்றுக் கொள்ளும் இக்காலத்தில் முஸ்லிம் தேசத்தின் விடுதலைக்கு தமிழர்களின் எதிர்ப்பு இல்லை என்ற மன நிம்மதியாவது முஸ்லிம்களுக்கு வேண்டும்.

*எம்.வை.எல்.எம். மன்சூர், காத்தான்குடி.*

### தமிழ் இளைஞர்கள் ஜனநாயக அரசியல் வழிமுறைகளின் மூலம் ஏமாற்றப்பட்டதன் விளைவாகவே ஆயுதப் போராட்டத்திற்கு திசைதிருப்பப்பட்டார்கள்.

அன்டன் பாலசிங்கமும் புலிகளும் இவ்வாறு கூறுவார்கள் என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்றுதான். ஆனால் புலிகள் முஸ்லிம்களின் உரிமையை மறுத்தாலும் அரசாங்கம் அதைப் பெற்றுத் தரும் என்று நம்பினார்கள்.

பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கேற்க வேண்டுமென்று அமைச்சர் ஹக்கீம் பிரதமரைக் கோரிய போது 5 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் அவ்வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. பின்னர் அதாவுல்லாஹ் அணியினர் பிரதமரைச் சந்தித்து முஸ்லிம் தனித்தரப்பு பற்றி வலியுறுத்திய போது 6 ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இப்போது 6 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தையும் முடிவுற்று இனிமேல் எந்தக் கட்டத்திலும் முஸ்லிம் தனித்தரப்பு பங்கேற்க முடியாது என்ற நிலை தோன்றியிருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்தால் உரிய நடவடிக்கையை எடுக்க முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளிடம் எந்தவொரு மாற்று வழியுமே இல்லாதிருப்பது நமக்குத் தெளிவாகின்றது.


ஏ.எல்.தவம்
தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர்.

இந்நிலையில் இந்தத் தலைவர்கள் முஸ்லிம் மக்களிடம் வந்து எதைக் கூறப் போகிறார்கள் என்பதுதான் எமக்குப் புரியவில்லை. முஸ்லிம்களின் அரசியல் கோரிக்கைகள் மறுதலிப்புக்குள்ளாகின்ற இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைகளின் போது உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸை மறைந்த தலைவர் உருவாக்கினார். ஆனால் இப்போதைய மு.கா தலைமைத்துவம் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைக் கூட நழுவிவிட்ட வண்ணமே இருக்கின்றது.

மு.கா. தலைவர் ரவூஃப் ஹக்கீமுக்கு முஸ்லிம்களின் இன்றைய அரசியலை எவ்வாறு நகர்த்திச் செல்ல வேண்டும் என்பதில் அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை. பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கேற்க முடியாது. அதற்கான வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கப் போவதுமில்லை. என்பதெல்லாம் தெரிந்தும் கூட ஹக்கீம் தனது ஐக்கிய தேசியக் கட்சி விசுவாசத்தைக் காட்டிக் கொள்வதற்காக அக்கட்சியுடன் ஒட்டிக் கொண்டே இருக்கிறார். இன்று தோன்றியிருக்கும் இந்தப் பிரச்சினைக்கு, பாராளுமன்ற ஜனநாயக வழிமுறைகள் மூலம் தீர்வைக் காணலாம் என்று இன்னும் மு.கா வினர் கூறிக் கொண்டிருப்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. பன்னிரண்டு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக இருந்த போதும், இரண்டு அணிகளாக பிரிந்து நின்று கோரிக்கைவிடும் போதும், வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் உருவாக்கப்பட்டு வேண்டுகோள் விடுத்த போதும் ஏற்றுக் கொள்ளப்படாத தனித்தரப்புக் கோரிக்கையை பாராளுமன்ற வழிமுறைகள் மூலம் மட்டும் வென்றெடுக்கலாம் என நம்பிக் கொண்டிருப்பது காலத்தையும் சந்தர்ப்பத்தையும் விரையமாக்குவதாகவே அமையும். இதை நம்பவும் நாங்கள் தயாராகவில்லை.

தமிழ் இளைஞர்கள் ஜனநாயக அரசியல் வழிமுறைகளின் மூலம் ஏமாற்றப்பட்டதன் விளைவாகவே ஆயுதப் போராட்டத்திற்கு திசைதிருப்பப்பட்டார்கள். ஆனால் முஸ்லிம் இளைஞர்கள் நிலைமைகளை உணரும் நிலைக்கு வந்திருக்கிறார்களே தவிர, இன்னும் போராட்ட நடைமுறைக்கு நகர்த்தப்படவில்லை. இந்நிலை நீடித்து முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப் போராட்ட வழிமுறைக்கு திசை திரும்பாமல் இருக்க வேண்டுமாயின் அவை தமிழர்களின் நிலைப்பாட்டிலும், முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்தின் வழிகாட்டலிலுமே தங்கி நிற்கின்றது.

(கருத்துக்கள் தொடரும்)

## விரைவில் உள்ளூராட்சித் தேர்தல்! முஸ்லிம் மக்கள் மத்தியில் உறுதியான அரசியல் ஆணையைப் பெற தேர்தலைப் பயன்படுத்துவோம்!

கடந்த வருடம் வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டு - திகதியும் குறிப்பிடப்பட்டதன் பின் விடுதலைப் புலிகளின் அரசியல் அழுத்தம் காரணமாக இரண்டு முறை வடக்கு, கிழக்கின் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவில்லை.நமது தலைமைகள் ஒன்றிற்கு மேல் ஒன்றாக பல சவால்கள் விட்டும் தேர்தலை அரசாங்கம் நடாத்தவில்லை. கிழக்கில் சிங்கள உள்ளூராட்சி சபைகளில் மட்டும் தேர்தல் நடாத்தப்பட்டது.

டோக்கியோ பேச்சுவார்த்தை முடிவடைந்த கையுடன் விடுதலைப் புலிகள் உள்ளூராட்சி தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென்ற தங்களின் நிலைப்பாட்டினை எடுத்துரைத்துள்ளனர். அன்று உள்ளூராட்சி தேர்தலை நடாத்தவிடாது உறுதியான நிலைப்பாடு எடுத்து அரசாங்கத்திற்கு அரசியல் அழுத்தத்தை கொடுத்தவர்கள் இப்போது உள்ளூராட்சி தேர்தலை நடாத்துவதற்கு இணங்கி இருப்பது விடுதலைப் புலிகளின் அரசியல் ஸ்திரப்பாட்டை தமிழ் அரசியல் சூழலில் பலப்படுத்திக் கொள்வதற்கே!

முஸ்லிம்களாகிய நாம் - கட்சி அரசியலின் பிளவும், சிதைவும் காரணமாக மிகவும் பலவீனமான அரசியல் சூழலினை எதிர் கொண்டு வருகிறோம்! நமது அரசியல் அரங்கில் கடந்த காலத் தேர்தல்கள் ஊடாக ஏற்கனவே பெறப்பட்ட மக்கள் ஆணையை நமது அரசியல் தலைமைகள் உதாசீனப்படுத்தி முஸ்லிம்களின் அரசியல் வாழ்வுடன் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் - எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை வெறுமனே நமது பிரதேசங்களை நிர்வாகம் செய்யும் அதிகாரத்திற்கான தேர்தலாக நாம் கொள்ளாது நமது தேசத்தின் அரசியல் நிலைப்பாட்டினை உறுதியாக முன்வைத்து சாத்தியப்படுத்த உழைக்க முன்வரும் சக்திகளிடம் அரசியல் அதிகாரத்தை கையளிப்பதற்கான மக்கள் ஆணையாகவும் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

## அமெரிக்கப் பத்திரிகை நிருபரின் துணிச்சல்

ஈராக் தெற்குப்பகுதியில் அமெரிக்கப்படையினருடன் சென்று செய்திகளைச் சேகரித்து அனுப்பிக் கொண்டிருக்கும் அமெரிக்கப்பத்திரிகை நிருபர் பெல் ஸ்மோக்கர் இரண்டு பத்திரிகைகளுக்கு நிருபராக செயற்படுகின்றார். அதில் ஒன்று அமெரிக்கப் பத்திரிகையான (கிறிஸ்டீன் சைன்ஸ் மொனிட்டர்) மற்றொன்று லண்டனில் வெளியாகும் பத்திரிகையான (டெய்லி டெலிகிராப்) இவர் அமெரிக்காவினால் ஈராக்கிற்கு எதிராக தொடுக்கப்படும் யுத்தம் பற்றி அமெரிக்க படையினர்களின் அபிப்பிராயம் எவ்வாறு இருக்கின்றது என்பதை அறிந்து கொள்வதற்காக களத்திலிறங்கினார். அந்த நேரத்தில் அமெரிக்கப் படையினர் யுத்தம் பற்றி தங்களது அபிப்பிராயத்தை கூறினார்கள். ஈராக்கியப்படையினரின் அகோரத்தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமலும் தற்கொலை வீரர்கள் தங்கள் மீது எந்நேரத்தில் பாய்வார்களோ என்ற பீதியும் அமெரிக்க கூட்டுப்படைகளிடம் அதிகரித்து காணப்படுகிறது. இப்படைகளின் மனோபலம் சிதைவடைந்து எதிர்காலத்தில் நீடிக்கப்போகும் யுத்தம் குறித்த பீதியில் மூழ்கியுள்ளது என்றார்.

அமெரிக்கப்படையினர் ஈராக்கிய எதிர்த்தாக்குதல்களுக்கு பெருமளவு பயந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவலை தனது பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். இச்செய்தியைப் பார்த்த பென்டகன் அதிகாரிகள் அடுத்த கணமே யுத்தம் நடக்கும் இடத்திலிருந்து அவரை வெளியேற்றினர். அவரை வேலையிலிருந்தும் இப்போது நீக்கி விட்டது அமெரிக்க பத்திரிகை நிறுவனம்

## பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளை ஈராக் மண்ணில் வதைக்கும் அமெரிக்கா!












சுவடு - 07
முஸ்லிம் குரல்
Muslim Kural
04 ஏப்ரல் 2003 02 - ஸபர் - 1424


Chief Editor, 143, Muhandhiram Road, Colombo - 03.
Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk


## முஸ்லிம் குரலின் பாதையும் பணியும்

நமது மக்களே! நமக்கான ஒரு தேசிய இயக்கத்தையும் அதற்கான பல்வேறு உறுதிமிக்க கட்டமைப்புகளையும் மிகச் செவ்வனே நமது மக்களுக்குள் ஸ்தாபிப்பதே முஸ்லிம் குரலின் பணியாகும் என்பதை மிகத் தெளிவுடன் நமது ஏழாவது சுவடில் முன்வைக்க விரும்புகிறோம்! நாங்கள் எந்த இலக்கை மையப்படுத்தி நமது மக்களை கருத்தியல், சிந்தனைத் தளத்தில் அணி திரட்டி வருகிறோம் என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள்!

இந்த நீண்ட பாதையில் முதல் கட்டமாகவே நமக்கான பத்திரிகைகளின் உருவாக்கத்தில் "முஸ்லிம் குரல்" முகிழ்ந்து உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. பல்வேறு வழிகளிலும் நீங்கள் காட்டிவரும் ஆதரவுக்கு நமது மக்களின் சார்பில் நன்றிகள்!

இலங்கை முஸ்லிம்களின் சமகால நிலைமையை நாம் அனைவரும் அறிவோம். இந்த அவல நிலையிலிருந்து நமது மக்களை மீட்டெடுப்பதற்கு பாடுபட வேண்டிய பொறுப்பு நமது சக்திகள், மக்கள் அனைவர் மீதுமான கடமையாக உள்ளன. இக்கடமையினைப் புறக்கணித்து நாம் ஒருபோதும் தப்பியோடி விட முடியாது!

நமது மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட மனோநிலை உள்ள மக்கள் சக்திகள் உள்ளன. பல்வேறுபட்ட அமைப்புகள், சித்தாந்த தளங்கள் என பல்வேறு பிரிப்புக் கோடுகளும் உள்ளன. இவைகளை ஒரே இரவில் நாம் மாற்றிவிட முடியாது. ஆனாலும், பல்வேறுபட்ட பிரிப்பு கோடுகளுக்குமிடையிலும் சமூக நலனை மையப்படுத்திய ஒரு பொதுவான உடன்பாட்டிற்கு நமது மக்களில் கணிசமானோரை ஒன்று திரட்ட முடியும். இந்த இலக்கை நோக்கிய பயணத்தில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டியுள்ளது.

முஸ்லிம் குரலுக்கு அரசியல் உள்ளது. ஒரு சமூகப் பார்வையுள்ளது. கொள்கைகள், இலட்சியங்கள் உள்ளன. இவைகள் நமது மக்களின் அபிலாசையுடனும் உணர்வுகளுடனும் பின்னிப் பிணைந்து நிற்பவை! முற்று முழுதாக நாங்கள் உன்னதமானவர்கள் என எங்கேயும் எங்களை நிரூபிக்க முயலவில்லை. எங்களிடம் தவறுகளும், பலவீனங்களும் நிறையவே இருக்கலாம்; அதனை நமது மக்களின் சுயவிமர்சனங்களுடன் திருத்திக் கொள்ள என்றுமே தயாராகவே உள்ளோம்.

நாங்கள் மக்களின் மன உணர்வுகளின் பிரதிபலிப்பையே எழுதிக் கொண்டிருக்கிறோம். சமூகத்திலுள்ள பல்வேறு மாற்றுக் கருத்துக்களை மதிப்பதற்கும் அவை தொடர்பாக திறந்ததும் ஆரோக்கியமானதுமான விவாதங்களை நடாத்தவும் தயாராக உள்ளோம். எங்கள் முடிவுகள் அல்லது கருத்துக்கள் நமது மக்களின் கணிசமானோரது உணர்வுகளின் ஒன்று திரட்டலாகும். அதற்கான ஒரு வாய்க்காலும் வாய்ப்புமே நாங்கள்.

அல்லாஹுத்தஆலாவைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சி நாம், நமது உன்னத பணியிலிருந்து ஒருபோதும் ஒதுங்கமாட்டோம்! மேலும் மேலும் உறுதியுடனும் திடத்துடனும் உரம் பெறுவதே எமது இலட்சியமும் இலக்குமாகும்.

*தோழமையுடன்*
*பிரதம ஆசிரியர்*

இப்பத்திரிகை 143, முகாந்திரம் றோட், கொழும்பு -3 இல் அமைந்துள்ள முஸ்லிம் குரல் [illegible] நிறுவனத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org